வெளியீட்டுத் தொடர் எண்

சூதமுனி சூத்திரம் 110

180/[51] 1/சூதசூத் ௨
சூதமுனி சூத்திரம் 110
பக்கம்: 46

அருள்மிகு பழனித் தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக் குழுவினரால்
பதிப்பிக்கப்பட்டுத்
தமிழ்நாடு அரசுக்கு
நன்கொடையாக அளிக்கப்பட்டது

கி. பி. 1975.

வெளியீட்டுத் தொடர் எண். 8

சூதமுனி சூத்திரம் 110

பேராசிரியர், டாக்டர், ந. சேதுரகுநாதன்

உரையுடன்.

அருள்மிகு பழனித் தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக் குழுவினரால்

பதிப்பிக்கப்பட்டுத்

தமிழ்நாடு அரசுக்கு

நன்கொடையாக அளிக்கப்பட்டது

கி. பி. 1975. விலை ரூ.

முதற் பதிப்பு — 1975.

அருள்மிகு பழனித் தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சி. ம. நூ. வெ. குழு — 1975ஆம் ஆண்டு

உரிமை:

அருள்மிகு பழனித் தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக் குழு
இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகம்,
சென்னை–600029.

அச்சிட்டோர்:

தமிழ்த்தென்றல் அச்சகம்,
விருதுநகர்.

அருள்மிகு
பழனித் தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

அறங்காவலர் குழு

திரு. பு. மனோகரன், அறங்காவலர் குழுத் தலைவர்.

திரு. **வி. வி. சி. ஆர். எம். கந்தசாமி**, பி. எஸ்ஸி. அறங்காவலர்.

திரு. **என். நாச்சிமுத்து**, எம். எல். ஏ., ,,

திரு. **புலவர் சி. பழனிச்சாமி**, எம். எல். ஏ., ,,

திரு. **ஏ. பச்சையப்பக் கவுண்டர்**, ,,

வி. எஸ். கோதண்டபாணி, பி. எஸ்ஸி., பி. எல்.,
துணை ஆசிரியர்—நிர்வாக அதிகாரி.

அருள்மிகு
பழனித் தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக் குழு

டாக்டர் இரா. தியாகராசன், எல், ஐ. எம்.,
பொறுப்பு அலுவலர்,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,
சென்னை–600010. — தலைவர்

டாக்டர் ஆ. ஆனந்தகுமார், ஜி. ஸி. ஐ. எம்.,
தலைவர், தமிழ்நாடு அரசு இந்திய மருத்துவ
மத்தியக் கழகம், சென்னை–600005. — பொருளாளர்

திரு. **பு. மனோகரன்**, தலைவர் அறங்காவலர் குழு.
அருள்மிகு பழனித் தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில். — உறுப்பினர்

டாக்டர் ப. சிற்சபை, காஞ்சி,
துணைத் தலைவர்,
இந்திய மருத்துவ மத்தியக் கழகம். — உறுப்பினர்

திரு. **வி. எஸ். கோதண்டபாணி**, பி.எஸ்ஸி;பி.எல்.,
நிர்வாக அதிகாரி, அருள்மிகு பழனித்
தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில். — உறுப்பினர்

டாக்டர் பு. மு. வேணுகோபால், எச். பி. ஐ. எம்.,
இயக்குநர், இந்திய மருத்துவத் துறை
சென்னை–600029. — சிறப்பு அழைப்பினர்

சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு

உறுப்பினர்கள்

1. **டாக்டர் இரா. தியாகராசன்**, எல். ஐ. எம்., பொறுப்பலுவலர், சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம், சென்னை–600010 — தலைவர்

2. **டாக்டர் பு. மு. வேணுகோபால்**, எச். பி. ஐ. எம்., இயக்குநர், இந்திய மருத்துவத்துறை, சென்னை–600029. — செயலர், உறுப்பினர்

3. **டாக்டர் சி எஸ். உத்தமராயன்**, எச்.பி.ஐ எம்., முன்னாள் இயக்குநர், இந்திய மருத்துவத்துறை, சென்னை-600005. — உறுப்பினர்

4. **டாக்டர் எம் சண்முகவேலு**, எச். பி. ஐ. எம்., முன்னாள் மருத்துவப் பேராசிரியர், இராமநாதபுரம். — ,,

5. **டாக்டர் கே. இராதா கிருஷ்ணன்**, எல். ஐ. எம். காவேரிப்பாக்கம், வட ஆற்காடு. — ,,

6. **டாக்டர் எ. சிறில் ஹென்றி**, எல். ஐ. எம்., ஓய்வு பெற்ற மருத்துவ அலுவலர், நகராட்சி மருந்தகம், திருச்சி. — ,,

7. **டாக்டர் ஆ ஆனந்தகுமார்**, ஜி. சி. ஐ. எம்., தலைவர், தமிழக அரசு இந்திய மருத்துவ மத்தியக் கழகம், சென்னை–600005. — ,,

8. **டாக்டர் ப. சிற்சபை, ஆர். ஐ. எம். பி.** துணைத் தலைவர், இந்திய மருத்துவ மத்தியக் கழகம், சென்னை–600005. — ,,

9. **பண்டிட் பெ. மூத்துகருப்ப பிள்ளை**, ஆர். ஐ. எம். பி., தலைவர், சித்த மருத்துவ சங்கம், மதுரை. — ,,

10. **டாக்டர் டி. வி. கல்யாணசுந்தரம்**, ஆர். ஐ. எம். பி., தலைவர், சென்டிரல் சித்தா மெடிக்கல் கவுன்சில், சென்னை–600012. — ,,

11. **டாக்டர் என். சேதுரகுநாதன்**, தமிழ்ப் பேராசிரியர், விருதுநகர். — ,,

12. **திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை**, முன்னாள் செயலர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சை. — ,,

சிறப்பு அழைப்பினர்கள்

1, **டாக்டர் பொன். குருசிரோன்மணி**, *பி. ஏ , ஜி: சி. ஐ. எம்.,*
முதல்வர். அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

2. **டாக்டர் மு. வே. ரமணன்.** *எல். ஐ. எம்.,*
பேராசிரியர், மேல் பட்டப் படிப்பு;
அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

3. **டாக்டர் டி: வி. சுப்பா ரெட்டி,** *கௌரவ இயக்குநர்,*
இந்திய மருத்துவ வரலாற்று ஆராய்ச்சி நிலையம்,
ஐதராபாத்.

4. **டாக்டர் டி. வி. இரத்தினவேலு சுப்பிரமணியம்,** *பி. எஸ்ஸி.,*
எம். டி , எம். ஆர். சி. பி , (லண்டன்) சென்னை –600010.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், எம். ஏ.

தமிழக அரசு நல்வாழ்வுத்துறை அமைச்சர்

தமிழக அரசு நல்வாழ்வுத்துறை அமைச்சர்

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், எம். ஏ. அவர்கள்

வழங்கிய அணிந்துரை

அலை மோதும் கடல் சூழும் ஞாலத்தில் கலை மேவும் முதுமொழியாய்த் தோன்றி — கால வெள்ளம் பாய்ந்தும் கன்னித் தன்மை குன்றாத தமிழுடன் பிறந்த தென்னாட்டுக் கலை சித்த மருத்துவம். சித்த மருத்துவ நுணுக்கங்களும் — உண்மைகளும், மறைந்தவை போக மறையாது வழங்கும் பல நூறு ஏடுகளில் இன்றும் ஒளிர்ந்து கொண்டுள்ளன. இவற்றை இன்று அறிவார் சிலர். அவர்களுள்ளும் அவற்றில் காணப்படும் உண்மைகளை அறிந்து உலகிற்கு உரைப்பார் மிகச் சிலரே. எனவே — அறிந்துரைக்கும் ஆற்றலுடைய அந்தச் சிலரின் துணை கொண்டு இன்றே அவற்றை அச்சேற்றி வெளியிடுவதன் மூலம் மீதமுள்ள நூல்களையும் நூலறிவையுமாவது இழவாது காத்திடல் நம் கடனாகின்றது.

அவ்வாறு பழைய சித்த மருத்துவ ஏடுகளை வெளியிடும் முயற்சிக்குத் துணையாவாரை நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க எனது நண்பர் விருதைத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர். சேதுரகுநாதன் அவர்கள் — கடமையாற்ற முன் வந்தார்கள். அதன் பயனே — சூதமுனி சூத்திரம் 110 என்னும் இந் நூலாகும்.

சித்த மருத்துவக் கலையின் அடிப்படையாகும் விஞ்ஞானத் துறைகளுள் ஒன்று வகார வித்தை எனப்படும் இரசவாதம். இந்த மருத்துவத்தின் அடிப்படைப் பொருள்கள் எனப்படும் தாது — தாவர — உயிர்ப் பொருள்களுள் சிறந்த பயன் நல்குவது ‘இரசம்’ ஆகும்.

ஆயுள்வேத மருத்துவ முறையின் முதல் ஆசிரியர்கள் எனப் போற்றப்படும் சரகர், சுசுருதர் ஆகியோர் நூல்களில் 'இரசம்' பற்றிய குறிப்பு எதுவும் காணப்படவில்லை என்பதை அறிவோர் சித்த மருத்துவத்தின் தனித் தன்மையை ஒப்புவர். "தொன்னுள் முதலே இரசவாதம், காய சித்தி, யோக நெறி முறைகள் ஆகியவை மேற்கொள்ளப்பட்டதைக் காணுங்கால், சித்தர்களே எல்லாக் கலைகளிலும் சிறந்த தேர்ச்சி பெற்ற கலை வல்லுநர்களாக இருந்தனர்" என்று மேலை நாட்டவர்கள் தமது நூல்களில் குறிப்பிட்டுள்ளது கொண்டு நாம் தெளியலாம்.

சித்த மருத்துவ நூல்களிலிருந்து வாதம், வைத்தியம் 'யோகம்' மாந்திரீகம் ஆகியவற்றிற்கு இரசத்தை–சித்தர்கள் பயன்படுத்தினர் என்று தெரிகிறது.

உடல் நலம் பெருகவும், தாது கட்டுப்படவும், களைப் பின்றி நெடுந்தொலைவு நடக்கும் வலிவு பெறவும், நெருப் பினுல் அழியாத இரசமணியை உடலில் அணிந்து கொண்டனர் எனவும்; நீண்ட நாள் நோயின்றி வாழ்வதற்குத் துணையாம் கற்பங்களையும் உணவுப் பண்டங் களையும் உண்ணலாகும் இரசக் கிண்ணி செய்து பயன் படுத்தினர் எனவும்;

கொடிய நோய்களைக் குணப்படுத்தவல்ல பற்பல பற்பம், செந்தூரம், கட்டு, களங்கு, குரு முதலான வகைப் பட்ட மருந்துகளைச் செய்து கொள்ளவும் 'இரசத்தை' பக்குவப் படுத்திப் பயன் கண்டுள்ளனர் எனவும் ஏடுகளால் அறிகின்றோம்.

ஆனுல் — இரச வாதம் — எளிதில் செம்பொன் செய்யும் ஒரு வழியாக உதவுதலின், தீய நோக்குடையார் பயன் படுத்தல் அஞ்சி — இந்த நூல் மிகவும் மறை பொருளாகவே (ரகசியமாக) வைக்கப்பட்டு வந்து—அருகிய நிலைக்கு ஆளாகியுள்ளது. ஆயினும்—மருத்துவ நோக்கினில் இன்றியமையாத இரசம் பற்றிய இந்த ஏடு — அருகிவிட்ட இக்கலையை உருப்பெறச் செய்யும் நன் முயற்சியாகும்.

பேராசிரியர் சேதுரகுநாதன் அவர்கள், பூச்சியரித்து நொறுங்கும் நிலையிலிருந்த பழைய சுவடியைப் பெற்று, பெயர்த்து எழுதி, பிறிதோர் பழைய ஏட்டுடன் ஒப்பு நோக்கி, பிழை நீக்கி, தெளிவுரை வரைந்து, தகுந்ததொரு முகவுரையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

நிறைந்த தமிழ் நூலறிவும் — சித்த மருத்துவத் திறனும் ஒருங்கே வாய்ந்த பேராசிரியர் டாக்டர். சேதுரகு நாதன் அவர்களால் — இக்கலைக்குரிய நூலை நாம் இழந்து விடாது பெற்றிருக்கிறோம் என்பதை எண்ணுமிடத்து நமது நன்றி அவருக்கு உரித்தாகின்றது.

இரசத்தின் மறு பெயர்களுள் ஒன்று 'சூதம்' என்பதால், — இரசத்தைப் பயன் படுத்தும் வழிவகையினை விளக்கிய சித்தரின் இயற்பெயரை வழங்காது, சூதமுனிவர் என்னும் சிறப்புப் பெயரையே வழங்கினர் போலும்! பெயர் வழங்கிய ஏது எதுவாயினும் பயன் வழங்கும் ஏடு இதுவாகும்!

இதன் வெளியீட்டு ஆசிரியர் அவர்களும், அவரனைய தகுதியுடையோரும் — தத்தம் வாய்ப்புகளுக் கேற்ப — இத்தகைய சித்த மருத்துவக் கலை விளக்கும் பழைய ஏடுகளை — பழுதிலாது வெளியிட்டு பழைமை மிகுந்த தமிழ் மருத்துவம் மறையாது நிலைக்க ஆவன செய்ய முன் வர வேண்டும் என்பதே என் பேரவா. இம்முயற்சி தழைத் தோங்கும் நாள் தமிழின் மாட்சி உலகெங்கும் முழங்கும் நாளாகும்.

அருள்மிகு பழனித் தண்டாயுதபாணி சுவாமி திருக் கோயில் சித்தர் நூல் வெளியீட்டுக் குழுவினர் முயற்சி யாலும் — நிதி உதவியாலுமே — வேறுபல நூல்களுடன் இந்த நூலும் வெளி வந்துள்ளமை கண்டு — மகிழ்ச்சியுடன் எனது உளமார்ந்த பாராட்டை வழங்குகிறேன். நன்றி.

அன்பன்

க. அன்பழகன்

பொருளடக்கம்

3 முதல் *14*–ஆம் பாடல் வரை

திருநீலகண்டவாலை
வாதம் *80*. வாத சூலை *60*. கிரந்தி *18*. குட்டம் *18*. பவுந்திரம் *8*. அண்டவாதம் முதலிய *18*. குன்மம் *16*. மூலம் *6*. சயம் *96*. சனி *18*. கவுசிகிராணி *8*. காமாலை சுரம், முசலகண்டன் வலி *18*. நீரிழிவு இவை நீங்கவும் பத்தரை மாற்றுப் பொன் செய்யவும் திருநீலகண்டவாலை

15 முதல் *20* வரை

கங்காளி இரதபற்பம்
நரை திரை நீங்க, யானை வலுவுண்டாக நூறுகற்பகாலம் வாழ, மாற்றுயர்ந்த வெள்ளி செய்ய.

21 முதல் *28* வரை

சீர்ராமச் செந்தூரம்.
9½ மாற்றுப் பொன் செய்யவும் அநுப்பான வகைக்கேற்பப் பல நோய் நீக்கவும்.

29 முதல் *30* வரை

உப்புக்கட்டு
செம்பு சுத்தி செய்யவும் பொன் செய்யவும்.

31 முதல் *42* வரை

கந்தகக் கட்டு, கந்தகச் செத்தூரம் ஏழரை மாற்றுப் பொன், துரிசுச் செம்பு நாகரச தங்கச் செந்தூரம், கெந்தித் தயிலம்.

43 முதல் *45* வரை

கெந்தகத் தயிலம்
சொறி சிரங்கு முதலிய நோய் நீங்க.
பசும் பொன்னை மாற்றுயரச் செய்ய.

46 முதல் 47 வரை

வங்கச் செந்தூரம்
$7\frac{1}{2}$ மாற்று. மேக நோய், மூச்சுவாங்கும் இளைப்பு, சொறி, புண், இருமல் ஆகிய நோய் நீக்க.

49 முதல் 50 வரை

ஆவரைப் பட்டைத் தயிலம்
அரிதாரச் செந்தூரம்.
காசம், இருமல் நீங்கும்.

51 முதல் 53 வரை

கெந்தக மெழுகு
$7\frac{1}{2}$ மாற்றுப் பொன் செய்ய. கிரந்திப் புண், சூலைப் புண், சுருங் குட்டம், உடலிலுள்ள புள்ளி, பூச்சி, பற்பாம்புத் தடிப்பு, வெடி சிரங்கு, சொறி ஆகிய நோய் நீங்க.

54 முதல் 63 வரை

பத்தரை மாற்றுப் பொன் செய்ய.
உடலிலுள்ள புழு, பூச்சி, குட்டம் நீங்க. மூக்கிலுள்ள மக்கு நிறம், தேமல், இருமல் மொழிச்சூலை, விசக்கடி, விசநீர்ப் புண், பொல்லாத புற்று, அரையாப்புப் புண்கள், குறை நோய், வெள்ளைக் குட்டம், இந்திரகண்டி, முயலகன் ஆகிய வலிப்பு நோய்கள், மாதர்ப் புற்று முதலிய பல நோய்கள் நீங்க.

64 முதல் 69 வரை

சூதக்குளிகை
164 சித்து உண்டாக
நெருப்பில் சுடாமல் நடக்க
படை விலக, அம்பு விலக தம்பிக்க.

70 முதல் *72* வரை

கெந்தகச் செந்தூரம்
நோயெல்லாம் நீங்க, தங்கச் செம்பு செய்ய. ஒன்பது உலோகமும் பொன்னாக. உடலில் கதிரொளி போல் ஒளியுண்டாக.

73 முதல் *79* வரை

செயநாக தங்க சூதகெந்திச் செந்தூரம்.
(தீப தூப பரிச லேபனவேதை)
விளக்கொளி புகை தடவல் பூச்சு மாற்று.
நரைதிரை மாற, உடல் உறுதியாக.

82 முதல் *88* வரை

சகல சரக்குங்கட்ட
மடக்குச் செயநீர் செய்து எல்லாச் சரக்கினையும் கட்டவும் பொன் செய்யவும்.

82 முதல் *86* வரை

பரங்கி வைப்பு
செம் பொன்னை நீற்றிக் குருவாக்க,

89 முதல் *91* வரை

தங்கக்குரு.

92 முதல் *104* வரை

இறைவிவழிபாடு.

105 முதல் *106* வரை

தங்கக் குரு முறையில் தாமிரவெள்ளை செய்ய. சய நோய் தீர, *10* மாற்றுச் செம்பொன் செய்ய. காயசித்தி பெற.

107 முதல் *109* வரை

10 மாற்றுச் செம்பொன் செய்யக் குப்பிவைப்புச் செந்தூரம், நரைதிரை நீங்க. அட்டகுன்மம், அட்டகாசம், மாறாத நீரிழிவு, குறை நோய், வெள்ளைக் குட்டம் முதலிய நோய் நீங்க.

சூதமுனி சூத்திரம் 110

முகவுரை

முனிவர்கள் பெருநூல்கள் பல எழுதி அவற்றிற்குத் திறவு கோலாகச் சிறு நூல்களும் பல எழுதி வழங்குவது வழக்கம். சூதமுனி சூத்திரம் என்ற இந்நூல் சூ த மு னி வ ரா ல் இயற்றப் பெற்றது. இதனைத் திறவுகோலாகக் கொண்ட பெருநூல் உளதோ இலதோ அறிதற்கு வாய்ப்பு இல்லை. "நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்" என்று தொடங்கும் தேவாரத்தில், "கற்ற சூதன்" என்று நம்பியாரூரர் குறிப்பிடுகின்ற சூதன் இவர்தாமோ வேறோ என்பது ஆய்வுக்கு உரியது சூதமா முனிவர் அருளிச் செய்த 'மேக நாதக்குளிகை' ரூ என்ற சிறு ப கு தி யு ம் அச்சிட்ட சில்லறைக் கோவையுள் காணப்படுகிறது.

சூதமுனி வேதமுனி என்ற பெயருடன் இருவர் இலங்கினர். வேதமுனிவர் சூடாமணி மாத்திரை அ-ம் அச்சாகியிருக்கின்றது.

வேதமுனி நந்தீசுரரை வணங்கி, இந்த உலகினைப் பொன்னுல காக்கும் வகையும் நெறியும் வகுத்தருள்க வெனப் பணிந்து கேட்க அதற்கு மனம் மகிழ்ந்து நந்தீசுரர் இ ந் நூ ற் பொருளை அருளினர். அப்போது சூதமுனிவரும் உடனிருந்தார். போகர் தாமும் உடனிருந்து கேட்டதாகத்தம் நூலில் எழுதியுள்ளார். "மெல்லவே என்முன்னுய் நந்தி தாமும் மேதினியில் சூதமுனிச் சித்தருக்குப், புல்லவே உபதேசஞ் செய்தார் பாரில் பூவுலகில் சித்துமுனி நந்தி தாமே" என்று தமது ஏழாயிர நாலாம் காண்டத்து 533-ம் பாடலில் பாடியுள்ளார். பாடி மேலும் சூதமுனி சூத்திரத்திலிருந்து 41 பாடல் எடுத்துத் தமது நூலிற் சேர்த்துக் கொண்டனர்.

எனவே நந்தீசுரரிடம் உபதேசப் பொருளாகக் கேட்டவர் மூவர். அவருள் சூதமுனிவர் உலகுக்கு உதவும் வண்ணம் 110ப் பாடலாகப் பாடியுதவினர்.

செவிவழிச் செல்வமாக எழுதாக்கிளவியாக வந்த இந்நூற் செல்வம் சூதமுனிவரின் அருளால் வெளிவந்தது திருநீலகண்ட வாலையைச் செய்தால், 'பாகுடைய நிதிகோடி திரவியமுண்டாகும்' என்றும்

"வகை சொல்வோம் கற்பத்தைச் சமாதியிலே யிருந்து
வாகாகக் கொண்டவர்க்கு நரைதிரையும் மாறித்
திகையவே மூன்று கற்ப காலம் மட்டும் மதன்போல்
செகம் முழுதும் புரக்க அருள் அரசராயிருப்பார்"

என்று பாடி இது பொய்யோ என்று நகைக்கவும் கூடுமென நினைத்து, 'நகையாதே நந்தி சொன்ன வாக்கிது தப்பாது. நாதனு ராணை நிசம்' என்றும் ஆணையிட்டுக் கூறியுள்ளனர்.

"மதனன்போல் ஆகவென்றால் சமாதியிலே யிருந்து
வளமான இரதபற்பம் பணவெடைகால் கொள்ள
அதமீறும் புளிப்புடனே கைப்பெல்லாம் நீக்கி
ஆவின்பா லுடன் குறுவை யரிசிச்சோ றுண்ணு

நிதம்பெறவே எழுந்தநரை திரையு மாறி
நீணிலத்தில் நூறுகற்ப காலம்வரை யிருப்பார்
சுதன்போல வேயிருநூறு ஆனைவலு வுண்டாம்
சோதிதிரு வாணை நந்தி சொன்னபடி செய்யே"

என்றும் சூள் உரைக்கின்றார்.

28-ஆம் பாடலில், "வாக்கிதுப் பாது நிசம் அரனாணையுண்மை" என்றும், 42-ஆம் பாடலில், "ஈசுரர்மேல் ஆணையிது தப்பாது உண்மை" என்றும், 48-ல் "நின்மலமாந் திருவாணை" என்றும், 50-ல் "சூதமுனி உரைத்த மொழி உண்மை நிசமாகும்" என்றும், 63-ல் "நாகமே தரித்த சிவன் ஆணை சொன்னேன் நந்தியுரைதப் பாது" என்றும், 77-ல் "உண்மை தானே" என்றும், 81-ல் "இது சத்திய வாக்கு" என்றுப், 90-ல் "சத்தியமே நந்தியுரை தங்கந்தான் குருவே" என்றும் பாடி, "ஓதுமிந்நூல் நூற்றுப் பத்தையுந்தான், சற்புத்திரற்குநீ ஓது சொன்னேன், வாது செய்யுந்துன் மார்க்கற்கிது காட்டாதே" என்றும் வற்புறுத்துகின்றார். பொருளடக்கத்திற் கூறிய வண்ணம் அமையும் மருந்து நோய் நீக்கவும் பொன் செய்யவும் உதவும். நூலையும் நன்றாய்ப் படியாமல் செய்முறையும் ஒழுங்காய்ச் செய்யாமல் உலகம் விட்டு விடுமோ

என்று கருதி ஆணையிட்டுக் கூறிய இந்நூல் வடிவத்திற் சிறியது எனினும், 'நிதிகோடி திரவிய முண்டாகும்' என்ற வண்ணம் செல்வமும் தந்து நீடுவாழச் செய்யும் என்பதும் உணரலாம்.

இந்நூற்பொருளை உணர்த்திய நந்தீசுரர் இயற்றிய கருக்கிடை 300. 1927-ல் அச்சாகியுளது. 'நந்தீசர் கலைஞானம் 1000' என்ற நூலும் நிகண்டு 300-ம் வெளிவந்துள்ளன. மேலும், நந்தீசர் வயித்தியம் 32.

நந்தீசர் முப்புப் பிரணவச் சூத்திரம்	37
நந்தீசர் சகலவிஷத்துக்கும் குளிகை	8
நந்தீசர் பூசாவிதி	12
நந்தீசர் பிரணவச்சூத்திரம்	15
நந்தீசர் பிரணவச்சூத்திரம்	12
நந்தீசர் பூர்வமுப் பூச்சூத்திரம்	12
நந்தீசர் ஞானம்	100
நந்தீசர் திராவகம்	11

ஆகிய இந்நூல் ஒன்பதும் சில்லறைக் கோவையுட்சேர்த்து வெளியிடப் பெற்றுள்ளன. இவர் நூல்கள் 11 இப்பொழுது கிடைத்துள்ளன.

சூதமுனி சூத்திரம் என்ற இந்நூலைச் சிவகாசி ஒறக்கண்டிக் கனகய்யாநாயுடு அவர்களிடம் விலைக்கு வாங்கினேன். முதல் அறுபது ஓலை இல்லை. 61-ஆம் ஓலைமுதல் எழுதப் பெற்றிருந்தது. 1ஆம் பாடல் முதல் 110ஆம் பாடல்வரை இந்நூலிலிருந்து பெயர்த்து எழுதினேன். முதல் அறுபது ஓலையில் இருந்த நூல் யாதோ? அறிய முடியவில்லை பூச்சியரித்து நொறுங்கும் நிலையிலிருந்த நூலைப் பெயர்த்து எழுவது அரியவேலையாக முடிந்தது பின்னர் வேறு ஒரு பெருநூலுக் கிடையில் சூதமுனி சூத்திரம் அமைந்து கிடந்தமை கண்டு அதனையும் பெயர்த்து எழுதிப்போகர் ஏழாயிரத்துள் பலவகைப் பிழைகளோடு அமைந்து கிடந்த 41 பாடல்களுடனும் ஒப்பு நோக்கி வழுக்கள் களைந்து ஒழுங்கு செய்து

சுருக்கமாகவும் தெளிவாகவும் உரையும் வரைந்து வெளியிட லானேன். பண்டைக் காலத்தில் வல்லுநர் ஒருவர் ஒரு நூல் வரைந்து அரங்கேற்றுவர். பின்னர் அதனைப் பெயர்த்து எழுதுவர். அதனையே பலர் பலமுறை பெயர்த்து எழுதி நெடுகப்பரப்புவர். இங்ஙனம் நூற்றுக்கணக்காகப் பெயர்த்து எழுதி நாடுமுழுதும் பரப்ப நெடுங்காலம் ஆகும். அதற்குள் பெயர்த்தெழுதியவர்கள் செய்த தவறான பிழைகளுடன் சுவடிகள் இருக்கும். இத்தகைய நூல்களைப் படித்துத் தெளிவு செய்து வெளியிடுவதில் உள்ள இடர்ப்பாடுகள் எல்லாம் நூல்எழுதி வெளியிடுவோர்க்குத் தெரியுமேயன்றி மற்றையோர்க்கு வாயினாற்சொல்லி விளக்கினாலும் உணர்தல் அரிது.

இந்நூலின் பொருளைச் சூதமுனிவருக்குச் சொன்ன நந்தி என்பவர் யார்?

"நந்தி யருள் பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்றிவர் என்னோடு எண்மருமாமே"

என்றார் திருமூலர். நந்தியாகிய சிவனிடம் அருள்பெற்றவர் திருமூல ரோடு சேர்ந்து எண்மர். நந்திகள் நால்வர் என்பதற்குச் சனகர், சனந்தரர், சனாதரர், சனற்குமாரர் என்று உரைகூறு கின்றனர். இவர்கள் தம்பெயருக்குப்பின் நந்தி என்று சேர்த்து வழங்கினர் போலும். இந்நூலிற் கூறப்பெறும் நந்தி இவர்களுள் ஒருவரோ வேறோ என்பது ஆயத்தக்கது.

மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், காலாங்கி கஞ்சமலையன் ஆகிய எழுவரும் திருமூலர் வழி வந்த சித்தர்கள், இவர்களிற் பலர்நூல்கள் கிடைத்துள்ளன. சூதமுனி சூத்திரம் மிக மிக அரிய நூலாகும். புற்று, மாருத சயரோய், மாருத நீரிழிவு, குட்டம் முதலிய நோய்களுக்கு மருந்து கூறுகின்றது. உலோகத்தில் பாய்ந்து கைப்பும் கரடும் நீக்கும் மருந்தே உடலில் உள்ள நோய் எல்லாம் தீர்த்து விளங்கச் செய்யும் ஆதலாலே "லோக வேதம் தேகவேதம்" இரண்டிற்கும் பயன்படுகின்ற பொன் செய்யும் மருந்தாகவே கூறினர்.

'துறைகோடி தொந்தம் கோடி' என்று சொல்லி மிகப்பல நூருயிரக் கணக்கான நூல்கள் வரைந்து குவித்தார்கள். அகத்தியர் நூருயிரம் எங்கே? இருபத்தோராயிரத்தறுநூறு எங்கே? நாற்பதினுயிரம் வெண்பா எங்கே? பன்னீராயிரம் எங்கே? வாத காவியம் *1000*, ஞானகாவியம் *1000*, பூரணகாவியம் *1000*, மாந்திரீக காவியம் *1000*, இலட்சண காவியம் *1000* ஆகிய ஐந்து காவியங்களுள் இலட்சண காவியம் ஒன்று நீங்கலாக ஏனை நான்கு காவியங்களும் இருக்கின்றன. இந்த ஐந்து காவியங்களுக்கும் குரு நூலாகிய பன்னீராயிரக் காண்டம் எங்கே போயிற்று? ஐந்து காவியத்துக்கும் திறவுகோலகிய பஞ்சகாவிய நிகண்டு இருக்கிறது யூகிமாமுனிவர் பன்னீராயிரக் காண்டம் எங்கே? கடல் கொண்டு போகவில்லை. "ராபர்ட்–டி– நொபிலி என்ற அன்பர் மதுரையில் அச்சகம் நிறுவி அச்சடிக்கவென்று தொகுத்து பிரஞ்சு நாட்டிற் கொண்டு போய்க் குவித்து வைத்துள்ள சுவடிகள் வகைபிரித்து அடுக்கமுடியாத அளவுக்கு மிகுந்து கிடக்கின்றன" என்று அறிஞர் பலர் பார்த்து வந்து கூறுகின்றனர். அவற்றில் மருத்துவ நூல்கள் எத்துணை உள்ளனவோ? இங்ஙனமே சரபோஜிமன்னரால் மராட்டியநாட்டிற்குப் போயின பெருநூல்கள் எத்துணையோ? வெளிமாநிலங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் போய்க் குவிந்து கிடக்கும் சுவடிகளை ஆராய்ந்து தேடிஎடுத்தால் மிகப்பல அரியநூல்கள் கிடைக்கும். கல்கத்தா தேசீய நூல் நிலையத்தில் பல நூறு சுவடிகளுக்குமேல் உள்ளன. யானே நேரிற் கண்டேன். இவற்றை யெல்லாம் பழம் பெருமை கூறுவதற்காக எழுதவில்லை.

நம் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர், க. அன்பழகன் எம். ஏ. அவர்கள் தம் நுண்மாண் நுழைபுலப் பேரறிவினுலும், பெருங்கலைகள் வளர்க்கும் பேரார்வத்தினுலும், பெருநூல்களை வரவழைத்து வெளியிடச் செய்யும் பெருந்திறல் வாய்ந்தவர்கள் என்று உணர்ந்தே எழுதுகின்றேன். அவர்களின் உண்மையான நல்நோக்கத்துடன் கூடிய ஆர்வமும் தூண்டுதலுமே இந்த நூல் வெளிவருவதற்குப் பெருந்துணை புரிந்தது. அவர்களுக்கு மனங்கனிந்த நன்றியை என்றும் கூறக் கடமைப்பட்டிருக்கின்ருேம். நன்றியுடன் வாழ்த்துகின்ருேம். வாழிய: இந்நூல் ஏட்டுச் சுவடியிலிருந்து நொறுங்கி அழிந்து போகாமல் காக்கப் பெற்றதற்கு மகிழ்கின்றேன்.

இந்நூலிற் கூறப்பெற்றுள்ள செந்தூரங்கள், தயிலங்கள் முதலிய மருந்தெல்லாவற்றையும் செய்து அன்பர்கள் பெரும்பயன் பெறுவாராக.

மேலும் இந்நூலைப் பற்றிச் சில குறிப்பு நோக்குக. முதல் இரண்டுபாடல் நுதலிப் புகுதல் என்னும் உத்திப்படி இன்ன பொருள் கூறுவோம் என்று சொல்கின்றன. இந்நூல் உபதே நூலாதலின் 'நாவிலுணர்ந்திடுவாம்' என்றார். நாவால் சொல்லக் கேட்டு உணர்வோம் என்பது பொருள். 3-ஆம் பாடலிலிருந்து நூல் அந்தாதியாக நடக்கின்றது. சொல்லும் முறையும் தெளிவும் மிகவும் பாராட்டத்தக்கன. மனப்பாடம் செய்வோம் என்று கருதி எழுதியிருக்கின்றார்கள். 108 பாடல் மந்திரம் போன்று நூலாக அமைகின்றன.

இந் நூலுக்கு நம் மாண்புமிகு அமைச்சரவர்கள் வழங்கிய அணிந்துரையில் முதல் மூன்றரை வரிகள் என்னை மெய்சிலிர்க்கச் செய்து கண்ணீர் வாரச்செய்தன. அணிந்துரைமுற்றும் படித்தபின் மெய்முழுதும் ஒரு பேரின்பம் தோன்றி நின்று மறைந்தது. இதனால் அவர்கள் எவ்வளவு மனக்கனிவுடனும் உருக்கத்துடனும் எழுதி யிருப்பார்கள் என்று உணரமுடிந்தது; சூதமுனி என்பதற்குப் பெயர்க்காரணம் ஆராய்ந்தமுறை வியக்கத்தக்கது. இரசமருந்து முறை தமிழகச்சித்தர் முறையேயாகும். ஆயுள்வேதமுறையிலும் மேனாட்டு மருத்துவமுறையிலும் இரசமுறைகள் இல்லை எனத் தெளிந்தோர் கூறுகின்றனர்.

சித்தர்முறை நூல்களில்பலவற்றை வடமொழியிலும் எழுதி வைத்தார்கள், அவற்றையே மீண்டும் தமிழிலும் மொழிபெயர்த்தனர். அந்தமுறையில் வெளிவந்த நூலே ஆனந்தகந்தம். வடவர் எழுதிய நூல்களிலிருந்து வந்தன என்பது புரட்டு, 'சிவஞான போதம்' வட மொழி ரௌரவ ஆகமத்திலிருந்து வந்ததென இது வரை மிகப்பல தமிழர்கள் கதைத்தார்கள், இப்போது வெளிவந்துள்ள ரௌரவ ஆகமத்தினுள் சிவஞான போத நூற்பாவுக்குஉரிய வரியோ பொருளோ இல்லை என்பது தெளிவாயிற்று. திருக்குறளை "வேதப் பொருளாய் மிகவிளங்கி" என்று பொய்பகரும் போக்கினர்க்கு எதனைச்சொன்னாலும் ஏறாது, வட நூல்களிலிருந்து சித்தர் நூல்கள் வரவில்லை என்பது உறுதி

அரிய அணிந்துரை வழங்கிய தமிழக அரசு நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. **அன்பழகன், எம். ஏ.,** அவர்களுக்கு மீண்டும் வியப்புடன் நன்றி கூறுகின்றோம்.

மதிப்புக்கு உரிய டாக்டர், இரா. தியாகராசன் எல். ஐ. எம் அவர்கள் இந்நூலை முதலிற்பார்த்து மகிழ்வடைந்தார்கள். பொருள் முடிபு கருதிப் பல பாடல்களுக்கும் சேர்த்துத் தொகுப்புவகையாக உரைஎழுதவும் வழிகூறினர்கள் அவர்களுக்கு என் நன்றி உரியது.

இந்நூல் மிக அழகாக வரல் வேண்டுமென மொழிந்து ஊக்கிய செந்தமிழ்ப்புரவலர், உயர்திரு. **வே. வ. இராமசாமியவர்களுக்கும்** அச்சிடச்செய்த உயர்திரு. **ஆர். டி. இராசன்** அவர்களுக்கும் மிக்க நன்றி செலுத்துகின்றேன்.

இங்ஙனம்

ந. சேதுரகுநாதன்.

மூலமுத லாதார முச்சுடராம் பொருளை
    மூதறிவி லைறியும் முக்கோணப் பொருளைக்
காலுமிது தலையுமிது காரணமாம் பொருளைக்
    கருத்துணர்வுக் கெட்டாத காட்சிதரும் பொருளைச்
சூலமுறு நந்தீசர் சூதமுனிக் கன்று
    சொன்னவுப தேசமென்ற சுந்தரமாம் பொருளை
ஞாலமுற எவ்வுயிர்க்கு நடுவில்நின்ற பொருளை
    நாதவிந்து சிவப்பொருளை நாவிலுணர்ந் திடுவாம். (1)

நந்தீசர் வேதமுனி சூதமுனி யிவர்கள்
    நாதனடி போற்றிசெய்து நயந்திருக்கும் வேளை
இந்திரமா லோகமென்ன இரதவித்தை செய்ய
    ஏதுவகை யென்றருளி வேதமுனி கேட்கத்
தந்திமுகன் றனைப்பணிந்து உரைத்திடுவார் நந்தி
    தாரணியில் உள்ளவர்க்குச் சாகாத வரமும்
மந்திரத்தால் அட்டசித்தி யாகும்வரலாறும்
    மாற்றதிகம் வருத்துகின்ற வளமாதிபகர்வாம் (2)

கருத்து:- வேதமுனி நந்தீசரை வணங்கி இவ்வுலகைப் பொன்னுலகாக்க வகையும் நெறியும் வகுத்தருள்க என்று வினவ நந்தீசர் சாகாவரமும் அட்டமாசித்தியும் பொன்மாற்று மிகுகின்ற வரலாறும் கூறச் சூதமுனி தானும் அதனைப் பெற்றுச் அம் முறைகளை உலகுக்கு வகுத்துரைக்கின்றார்.

வாதம் 80. வாத சூலை 60 கிரந்தி 18. குட்டம். 18 பவுந்திரம் 8 அண்டவாதம் முதலிய 18 குன்மம் 16 மூலம். 6 சமயம் 96. சனி 18 கவுசி கிராணி 8. காமாலை சுரம், முசலகண்டன் வலி 18. நீரிழிவு ஆகிய நோய் நீங்கவும் பத்தரை மாற்றுப் பொன் செய்யவும் திருநீலகண்ட வாலை

ஆதியர ளருமையாள் தன்னுடனே அன்பாய்
    அருளியசொல் வேமுனிக் கறிவித்தார் நந்தி
சாதிலிங்கந் தன்னிலிரு பதுகழஞ்சு வாங்கித்
    தரமாகச் சிறுபயறு போலவே நறுக்கி
நீதிசெறி இலுமிச்சம் பழச்சாறு விட்டு
    நேராக வொருசாமம் வெய்யிலிலே வைத்து
சூதில்லாக் கொடிவேலி வேர்கொண்டு வந்து
    தூளாக இடித்ததனை வேருக வையே (3)

வைத்தபின்பு தனித்தகன்ற வாய்சேரும் பானை
வகைசெய்து இரண்டுகொண்டு வந்ததிலே ஒன்றில்
பெய்த்திடவே கொடிவேலிப் பொடிபாதி யிட்டு
மேலாகச் சாதிலிங்கப் பொடியதன்மேல் வைத்து
சித்தாக அதின்மேலும் கொடிவேலிப் பொடியைச்
சிறப்பாகப் பரப்பியதின் மேற்பானை தனக்குக்
கைத்திடாத் தலைவாழைப் பழுப்புமதுவுடனே
காரணமாம் முருக்கிலையும் கைசேர்த்து இடியே (4)

இடித்துஇரு வகைஇலையும் தனிச்சாறு வாங்கி
இதமாக மேற்பானைத் தூரிலே தடவி
வடித்தந்தப் பானைகொண்டு வாய்சேர்த்து மூடி
வாகாகச் சந்துவாய்க் கெழுசீலை செய்து
பிடித்துநீ யுலர்த்தியே வெடித்தவிடந் தனக்குப்
பின்னுமந்த மண்தடவி உலர்த்திவலுச் செய்து
படித்ததொரு அஞ்செழுத்தால் முன்னவனைப் பணிந்து
பாங்காக வுபதேசஞ் செய்தடுப்பி லேற்றே. (5)

ஏற்றியந்தக் கமலம்போல் முப்பதுநா ழிகைதான்
எரியிட்டே யாற்றியதை எடுத்துநீ வைப்பாய்
பாத்திரத்தில் சீலைமண்ணைத் திறந்ததனை நன்ருய்ப்
பார்க்கவே மேற்பானைத் தூரிலே இரதம்
வேற்றுமையாய் இருக்குமதைப் பன்றிமுடி யதனல்
மெதுவாகத் துடைத்ததனை வாங்கிவைத்துக்கொண்டு
நாற்றிசையும் புரக்கவே எடுத்தவகைக் கெல்லாம்
நன்ருகக் கூட்டும்வகை பேர்சொல்லி நாட்டே. (6)

நாட்டுவேன் திருநாமம் நீலகண்ட வாலை
நந்தியுரைப் படியறிந்து சேர்க்கும்வகை கேளு
கூட்டுவாய் கண்டங்கத் திரியினுட பழத்தைக்
கொண்டுவந்து இடித்ததனைச் தனிச்சாரு யெடுத்து
வீட்டில்வைத்துக் கொண்டதற்கு முன்னமே யுரைத்த
வேதாந்தச் சாதிலிங்க இரதத்தை நிறுத்து
ஊட்டுநீ கழஞ்சிக்குக் காற்படிசா றளந்து
உறைஉறைய விட்டதனை வற்றுமட்டு மரையே. (7)

அரைத்தெடுத்து மொன்றிலே யடைத்துவைத்துக் சொண்டே
அன்பாகச் சிவகாமிக் கருட்பூசை செய்து
உரைப்பாக வைத்தவெள்ளித் தகடாக்கி யதிலே
உறவாக நீலகண்ட வாலேதனைப் பூசி
இரைத்துவளர்ந் திடுங்கோழிப் புடம்போடத் தானும்
இடுந்தங்கம் மிகுமாற்றுப் பத்தரையே காணும்
வரைத்துயர வைத்தசெம்புத் தகடதிலே பூசி
வார்க்கோழிப் புடம்போட மாற்றுமா றரையே.

ஆறரையுங் காணுமதில் பின்னுமதில் வகைகேள்
அவனிதனில் மானிடர்க்கு மானகற்பம் சொல்வேன்
மாறடைந்த விடத்தலையின் வடக்கான வேரை
வாகாகக் கொண்டுவந்து சாணைதனி லுரைத்து
வீறுன நெல்லிக்காய் அளவிலே உருட்டி
மேலான வாலேரசம் பணவெடைகால் கூட்டித்
தேறுத பிணியாளர்க் கேழுநாள் கொடுக்கத்
தீருமெனும் பிணிக்குவகை செப்பிடவு மாமே. (9)

ஆமென்று பிணிக்குவகை சொல்வதுகேள் அப்பா
ஆக்கைதனி லேயெழுந்த வாதம் எண்ப துடனே
நாமென்று வருவாத சூலேயறு பதுவும்
நாயினுங்கே டாக்குமந்தக் கிரந்திபதி னெட்டும்
தாமென்ற ஆண்மைசெயுங் குட்டம்பதி னெட்டும்
தரமழிக்கும் மகத்தான பவுந்திரமோ ரெட்டும்
ஏமென்ற அண்டவாத முதல்மூவா றுக்கும்
இதுவாலே கற்பமென இயம்பவிண்ணில் போமே. (10)

விண்ணில்போம் விடுமூல வியாதியா றுடனே
வேகமாய் எழுந்தகுன்மம் பதினறுங் கூட
மண்ணில்தான் பிறப்பவர்க்குச் சயரோக மனைத்தும்
மாயமென்ன வந்திருக்கும் சன்னிபதி னெட்டும்
கண்ணில்கா ணுதுதவ றுண்டுதான் பீடை
கவுசிக நோய் கிராணிஎட்டும் காமாலே சுரமும்
எண்ணித்தான் முடியாத ஈசுரனர் பதத்தில்
இருக்குமுசல் கண்டன்வலி பதினெட்டும் ஏகும். (11)

ஏகுமே பலபிணியுஞ் சகலவியா திகளும்
என்றுரைத்த நந்திபின்னும் இயம்பியதைக் கேளாய்
வாகுடைய மானிடர்கள் ஆக்கையெடுத் தோர்க்கு
வகையாக முன்சொன்ன வாலைதனைச் செய்தால்
பாகுடைய நிதிகோடி திரவியமுண் டாகும்
பண்பாகப் பின்னுரைத்த வாலைகற்பம் கொண்டால்
போகுமே எண்ணமுற்ற நோயான எல்லாம்
பொய்யாது கற்பத்தில் இன்னம்வகை சொல்வோம். (12)

வகைசொல்வோம் கற்பத்தைச் சமாதியிலே யிருந்து
வாகாகக் கொண்டவர்க்கு நரைதிரையு மாறித்
திகையவே மூன்றுகற்ப காலமட்டும் மதன்போல்
செகமுழுதும் புரக்கஅருன் அரசராயிருப்பார்
நகையாதே நந்திசொன்ன வாக்கிது தப் பாது
நாதனு ராணைநிசம் இன்னும்வகை கேளாய்
தகையாதே முன்சொன்ன விடத்தலையின் இலையைத்
தரமாகப் பறித்துவந்து சாந்தெனவே அரையே. (13)

சாந்தெனவே அரைத்ததிலே நெல்லிக்காய் அளவு
சகலகுணம் உனக்குச்சொன்ன நீலகண்ட வாலை
கூர்ந்தரைக்காற் பணவெடையும் கூட்டியா வரையின்
குணமுடைய அஞ்சுவகை மருந்தெடுத்து உலர்த்தி
நேர்ந்துபொடி ஆக்கியதில் வெருகடியும் சேர்த்து
நிறையாகப் பசுவின்வெண்ணெய் அநுப்பானந்தனிலே
காந்தல்நீ ரிழிவெடுத்தோர்க் கிருபோது எழுநாள்
கையாரக் கொடுக்கநிற்கும் காசினியோர்க் குரையே. (14)

3 முதல் 14 வரையுள்ள பாடல்களுக்கு உரை

திருநீலகண்டவாலை

ஆதிஅரனர் உமையவளுக்கு அன்புடன் அருளிய முறையை அம்மையிடம் நந்தி முனிவர் கேட்டு வேதமுனிக்கு அறிவித்தார். அதனைச் சூதமுனி 'காசினியோர்க்கு உரை' என்று தமது பாடலினுல் அறிவிக்கின்றார். 20 கழஞ்சு சாதிலிங்கம் வாங்கிச் சிறுபயறு போல் நறுக்கி இலுமிச்சம் பழச்சாறு விட்டு ஒருச்சாம நேரம் வெயிலில் காயவைத்து எடுத்துக் கொள்க. நல்ல கொடிவேலி வேரைக் கொண்டு வந்து அதன் தோலைத் தூளாக இடித்து வேருக வைத்துக்கொள்க. பின்னர் ஒன்ரேடு ஒன்று வாய் பொருந்தும்படி

யான இரண்டு பானை வாங்குக. அவற்றில் ஒன்றான மேற் பானைக்குள் தலைவாழையிலையின் பழுப்புச் சாறு பூசிப் பின்பு முருக்கிலையின் சாறும் பூசி உலர்த்துக. அடிப்பானைத் தூரில் கொடிவேலிப் பொடி பாதி இட்டு, அதன் மேல் சாதிலிங்கப் பொடியை வைத்துப் பின்பு அதன்மேல் கொடிவேலிப் பொடியைப் பரப்பி, மேற் பானையைக் கீழ்ப் பானையின் வாயிலே பொருந்தும்படி கவிழ்த்து மூடிச் சந்து வாய்க்கு ஏழு சீலைமண் செய்து உலர்த்தி வெடித்த இடத்துக்குப் பின்னும் மண் தடவிக் காய வைத்து வலுவாக்கிப் 'படித்ததொரு அஞ்செழுத்தால் முன்னவனைப் பணிந்து' அடுப்பிலேற்றித் தாமரைப் பூவின் அளவாக நெருப்புக் கொழுந்து எரியும்படி முப்பது நாழிகை (12 மணி நேரம்) எரித்து நன்றாகக் குளிர ஆறிய பின்பு சீலைமண்ணைத் திறந்து பார்க்க மேற்பானைத் தூரில் ரசம் ஏறி இருக்கும். அதனைப் பன்றி முடியால் மெதுவாகத் துடைத்து ஒதுக்கி எடுத்து வைத்துக் கொள்க. அதனை நாலு திசையிலும் உள்ள மக்களைக் காப்பற்ற அதன் புகழ் கூறிமருத்துவம் செய்க. இம் மருந்தின் பெயர் திருநீலகண்டவாலை.

கண்டங்கத்திரிப் பழம் கொண்டு வந்து இடித்துத் தனிச்சாறு வாங்கி மேற்கூறிய ரசத்தில் ஒரு கழஞ்சிக்குக் காற்படி சாற்றைச் சிறுகச் சிறுக ஊற்றி உறைய உறைய வற்று மட்டும் அரைத்து எடுத்து ஒரு குப்பியில் வைத்துக் கொள்க. பின்னர் வெள்ளியைத் தகடாகத் தட்டி அதன்மேல் நன்றாகப் பொருந்தும்படி நீலகண்டவாலை ரசத்தைப் பூசிக் கோழிப்புடம் போடுக. பத்தரைமாற்றுச் செம்பொன்னாகும். செம்புத் தகட்டிலே பூசிப் புடம் போட ஆறரை மாற்றுக் காணும். செய்யுளில் "இடுந்தங்கம் மிகுமாற்றுப் பத்தரையே காணும்" என்ற குறிப்பின்படி வெள்ளியோடு சிறிதளவு தங்கமும் சேர்க்க வேண்டும் என்பது தேர்க. இரும்பு, வெள்ளி செம்பு, காரீயம், வெள்ளீயம் ஆகியவற்றில்பாய்ந்து அவற்றின் கசடறுத்து ஒளிரச் செய்யும் மருந்தினை உடம்பிற் பாய்ச்சும் பொழுது உடம்பின் கசடு நீக்கிச் செம்பொன் போல் ஆகி நீடு வாழச் செய்யும். அதற்காகப் பொன்னில் மருந்தினைப் பாய்ச்சி (பொன்–ஐம்பொன்னுக்கும் பொதுப் பெயர்) அதன் கைப்புக் கசடு திருகல் முருகல்களை நீக்கும் தன்மையுள்ளதா என ஆராய்ந்து பின்னர் உடம்பிற் செலுத்துவது ஒரு முறை. பொன்னை ஒளிரச் செய்யும் மருந்து தன்னையும் ஒளிரச் செய்யும் என்பர். இதனையே தேக வேதத்திலும் லோக வேதத்திலும் காண்க என்பர். அம் முறைப்படி இதனை உடலிற் பாய்ச்சும் முறை காண்போம்.

விடத்தலை என்பது சிறு தூருக வளரும் ஒரு வகை முள் மரம். இலை எள்ளைப்போல் இருக்கும் இதன் வடக்கு வேரைக் கொண்டு வந்து சந்தனம் உரைப்பது போல் சாணைக்கல்லில் உரைத்து நெல்லிக்காய் அளவு உருட்டி அதனெடு திருநீலகண்டவாலை ரசம் அரைக் காற்பண வெடை (அரைக் குன்றி எடை) சேர்த்துத் தெளியாத நோயாளர்க்கு ஏழு நாள் கொடுப்பீராக வாதம்–80. வாதசூலை-60. கிரந்தி–18. குட்டம்–18 பவுந்திரம்–8. அண்டவாதம் முதலிய 18 மூலம் குன்மம்–16. சயரோம்-96. சனி–18 கவுசிக நோய் கிராணி–8. காமாலை, சுரம் முசலகண்டன் வலி-18 ஆகிய நோய் நீங்கும். இந்த வாலைரச மருந்தைச் செய்து வழங்கினவர்க்கு "நிதி கோடி திரவியம் உண்டாகும்" என்றார்.

சமாதியிலேயிருந்து இம் மருந்தைக் கொண்டவர்க்கு நரை திரைமாறும். மூன்று கற்ப கால மட்டும் மன்மதன் போல உலக மெல்லாம் புரக்க 'அருளரசராயிருப்பார்'. சிரியாதே நந்தி சொன்ன வாக்கிது தப்பாது' 'நாதனுர் ஆணைநிசம்'. மேற்கூறிய விடத்தலையின் (விடத்தேர்) இலையைச் சாந்து போல் அரைத்து நெல்லிக் காய் அளவு எடுத்து மேற்கூறிய நீலகண்டவாலை ரசம் அரைக்கால் பணவெடை (அரைக் குன்றியளவு) கூட்டி ஆவிரையின் இலை பூ காய் பட்டை வேர் ஆகிய ஐந்தின் தூள் வெருகடி சேர்த்துப் பசுவெண்ணெயிற் கலந்து ஏழு நாள் 14 வேளை கொடுக்கக் காந்தல், நீரிழிவு முதலிய நோய் நீங்கும். "காசினியோர்க்குரையே" என்கின்றார்.

விடத்தலை என்பது நூலில் விடத்தேர் என்றும் வரும்.

மாறவே விடத்தேரின் வேர்ப்பட்டை வாங்கி மருவநன்றாய்
இடித்தரித்துச் சூரணமாக்கித்
தாறவே பலம்நாலு நிறுத்துக் கொண்டு தனுக்கானசூதமது
பலந்தா னலு
கூறவே குலாமல்லிச் சாற்றினலே குலவியரைத் தெண்சாமம்
பொடியாய்ப்பண்ணித்
தேறவே நாற்பதுநாள் தேனிற்கொள்ளு சில்விசமாம் பதினெட்டுக்
குட்டம் போமே.

(போகர்கற்பம் 300--ல் 86)

15 முதல் 20-ஆம் பாட்டு வரை

'நரை திரை நீங்க யானை வலுவுண்டாக நூறு கற்ப காலம் வாழ மாற்றுயர்ந்த வெள்ளி செய்யக் கங்காளி இரதபற்பம்.

காசினியெல் லாம்புரக்கப் பின்னுமந்த முனிக்குக்
கங்காளி இரதபற்பம் வகைசொல்வார் நந்தி
தேசிகனே முன்னுரைத்த சாதிலிங்க இரதம்
சிறக்கவே அரைக்கழஞ்சு குழிக்கல்லில் இட்டு
மாசில்லாக் கண்டங்கத் திரிப்பழச்சா றதிலே
வாகாய்முக் காற்படியும் மூன்றுவட்ட மாகத்
தூசிநீ ராகவிட்டு வற்றுமட்டும் அரைத்துச்
சுருளவே யெடுத்துநல்ல குகைதனக்கு ளாக்கே (15)

ஆக்கியந்தக் குகைக்குள்ளே மணற்றவளை நெய்யை
அரைமட்டும் விட்டுவாய்ச் சில்லாலே மூடி
நோக்கியந்த மாயேழு சீலைமண் செய்து
நொய்தாக எருவடுக்கிச் சேவற்புட மாக
தாக்கியதில் தீமூட்டி ஆறவிட்டெடுத்தால்
தப்பாது படிகநிறப் பற்பமா யிருக்கும்
வாக்கியஞ் சொல் கணபதிக்கும் எள் பயறு தேங்காய்
வடையப்பந் தோசையொடு பூசனையுஞ் செய்யே. (16)

பூசுனைகள் செய்தபின்பு இரதபற்பந் தன்னைப்
பூராய மாகவொன்றி லடைத்துவைத்துக் கொண்டு
காசெனவே வெளுத்திருக்கும் வெள்ளீயம் பலந்தான்
கடுகவே உருக்கியது தெளிந்திருக்கும் வேளை
வாசனைசேர் இரதபற்பம் மஞ்சாடி கொடுக்க
மாற்றுயர்ந்த வெள்ளியது காசினிலு மதிகம்
நேசனே தப்பாது கங்காளி பற்பம்
நேராக மானிடர்க்குப் பின்னுமதில் கேளே. (17)

பின்னுமதில் வகைகேளு மானிடரா னவர்க்குப்
பிணிவந்தால் திரிகடுகு சூரணமே செய்து
உன்னும்வெரு கடியளவே சூரணத்தைக் கூட்டி
உறவாக இரதபற்பம் பணவெடைகால் கூட்டித்
தன்னுள்ளே அநுப்பானந் தேனிலா கினுமோ
தாயான பனைவெல்லந் தன்னிலா கினுமோ

மின்னுநோ யாளருக் கேழுநாட் கொடுக்க
　　மிகுபிணியுந் தீருமிந்தப் பாகந்தா னறியே. (18)
பாகந்தா னறியும்வகை எப்படியோ கேளு
　　பலபிணிக்குத் தகநீயே அநுப்பானம் எடுத்து
வேகஞ்செய் யிரதபற்பம் பணவெடைகால் கூட்டி
　　விதமாக விருபொழுது ஏழுநாள் கொடுக்கத்
தாகந்தான் அறவொழிந்து சகலவியா திகளும்
　　தணியுமே கற்பத்தின் இன்னம்வகை கேளு
தேகந்தான் பழுப்பேறித் தளர்ந்தமா னிடர்கள்
　　சிறுவாலை மதனன்போல் சிறப்பதற்கு மாமே (19)

மதனன்போ லாகவென்றால் சமாதியிலே யிருந்து
　　வளமான இரதபற்பம் பணவெடைகால் கொள்ள
அதமீறும் புளிப்புடனே கைப்பெல்லாம் நீக்கி
　　ஆவின்பா லுடன்குறுவை யரிசிச்சோ றுண்ணு
நிதம்பெறவே எழுந்தநரை திரையுமே மாறி
　　நீணிலத்தில் நூறுகற்ப காலம்வரை இருப்பார்
சுதன்போல வேஇருநூறு ஆனைவலு வுண்டாம்
　　சோதிதிரு வாணைநந்தி சொன்னபடி செய்யே (20)

15-ம் பாடல் முதல் 20-ம் பாடல் வரை உரை

சுங்காளி இரதபற்பம் கூறுகின்றார். சாதிலிங்க ரசம் அரைக் கழஞ்சு குழிக்கல்லில் விட்டுக் கண்டங்கத்திரிப் பழச்சாறு முக்காற் படியைத் துணியால் வடிகட்டி மூன்று முறையாகச் சிறுகச் சிறுக விட்டு வற்றுமட்டும் சுருள அரைத்து ஒரு குகைக்குள்ளாக்கி அரைக் குகையளவுக்கு மணற்றவளை நெய்யை விட்டுச் சில்லாலே மூடி ஏழு சீலை மண் செய்து மெல்லிய எருவடுக்கிச் கேவற்புடமிடுக. ஆறிய பின் எடுக்கப் படிக நிறமாகப் பூத்திருக்கும். எடுத்து ஒரு அரிய குப்பியில் அடைத்து வைத்துக் கொள்க.

ஒரு பலம் வெள்ளீயத்தை உருக்கி அது தெளிந்து நிற்கும் போது ஒரு மஞ்சாடி இரதபற்பம் கொடுக்க உடனே வெள்ளீயம் மாற்றுயர்ந்த வெள்ளியாகும்.

திரிகடுகுச் சூரணம் வெருகடியளவு எடுத்து அத்துடன் அரைக் குன்றி எடை இரசபற்பம் சேர்த்துக் கொடுக்க மிகப் பல பிணிகள் நீங்கும. அநுப்பானம் அறிந்து கொடுக்க எல்லா வகை

நோயும் நீங்கும். பழுப்பேறிய உடம்பு தளர்ச்சி நீங்கப் பெறும். மதனன் போல் ஆவான். சமாதியிலே இருந்து பணவெடைகால் இரதபற்பம் உண்டு கைப்புப்புளிப்பு நீக்கி ஆவின் பாலும் கருங் குறுவை அரிசிச் சோறும் உண்ண நரைதிரை மாறி நூறுகற்ப காலம் இருப்பான். இளைஞன் போலிருப்பான். பல ஆனையின் வலுவுண் டாகும்.

21 முதல் 28-ம் பாடல் வரை சீர்ராமச் செந்தூரம்

9½ மாற்றுப் பொன் செய்யவும் அநுப்பான வகைக்கேற்பப் பல நோய்கள் நீக்கவும்.

செய்யவே நந்திபின்னும் வேதமுனி தனக்குச்
செப்புவார் சீர் ராமச் செந்தூர வகைதான்
வையகமெல் லாம்புரக்கச் சுத்திசெய்த இரதம்
வகையாக அறுபது கழஞ்சிதான் எடுத்து
வெய்யதொரு கெந்தகமும் எடைமுன்போல் கூட்டி
மேலான சாதிலிங்கம் பதினைந்து கழஞ்சி
ஐயமென் று நினையாதே பொன்னரிதா ரத்தை
அன்பாக ஐம்பது கழஞ்சியதில் சேரே. (21)

களஞ்சி ரெண்டு தனித்த எடை மனோசிலையுங் கூட்டிக்
கடிதான நாகத்தை ஈரஞ்சு வட்டம்
வளஞ்செய்து இலுப்பையெண்ணெய் தனிலுருக்கிச் சாய்த்து
வகைபாகம் நாற்பது களஞ்சியதில் சேர்த்து
உளஞ்செய்த தங்கமது ஒருகளஞ்சி யாக
ஒக்க இருநூற்றிருபத் தெண்களஞ்சி எல்லாம்
தளஞ்செய்த எருக்கலம்பால் தன்னிலொரு சாமம்
சாகவே அரைத்துமறு சாறுபுர சிலையே. (22)

புரசிலையும் தும்பையுடன் செருப்படிசெம் முள்ளி
புகழாக மாதளையின் பூவுடனே யஞ்சும்
விரசாகக் கொண்டுவந்து வெவ்வேறே யிடித்து
வேறாகத் தனித்தனியே சாறெடுத்துக் கொண்டு
திரசமுற இச்சாறு விட்டொவ்வொரு சாமம்
தீர்க்கமுறச் சொல்முறையாய்ச் சாமம் ஐந்து அரைத்து

கரசமுறப் பின்னுமந்த மாதளையின் பூவும்
கானமுருக் கம்பூவும் கலந்துசமன் கூட்டே. (23)

கலந்துசமன் கூட்டியபூ இடித்ததின்சா றெடுத்துக்
கைசேர வொருச்சாமம் பின்னுநன்று யரைத்துப்
புலர்ந்தநிழற் குள்ளுலர்த்திப் பொடியாக்கி யெடுத்துப்
பூசமுடன் கெங்காசலக் குப்பியது தனக்கு
நிலந்தெரியா தேயேழு சீலைமண்ணுஞ் செய்து
நேராக வேயுலர்த்தி வெடித்திடமும் பார்த்துப்
பெலன்பெறவே பின்னுமதில் அரைத்தமண்ணைப் பூசிப்
பிசகாமல் குப்பிக்குட் பேணியருந் தடையே. (24)

மருந்தான பொடிவகையைக் குப்பியரை மட்டும்
வாகாக அடைத் தந்த வாய்பளப்பக் கல்லால்
திருந்தவே மூடியதை மேலும் அரை மண்ணைத்
திறமாகப் பூசியொரு தாழிதனை யெடுத்து
பொருந்தியதற் குள்நாலு விரற்கனம தாகப்
பொடிமணலை யிட்டதின்மேல் குப்பிதனை வைத்துக்
குருந்தமாய்ப் பின்னுமந்த மணல்தனையே கொட்டிக்
குப்பிக்குள் மறைய இட்டு ஒட்டியடுப் பாக்கே. (25)

ஒட்டியதோர் அடுப்புமிட்டுத் தாழியதன் மேலே
உள்ளாகப் புதையவைத்து முன்னவற்குப் பூசை
கிட்டியன்பாய்ச் செய்தபின்பு தீபமொரு சாமம்
எரியவிட்டுப் பின்கமலம் இருசாமம் எரிப்பாய்
கெட்டியதாய்க் கடுகளரி ஒருச்சாமம் அதற்குக்
கெணிதமாய் இப்படியே சாமம்நால் எரித்து
விட்டபின்பு ஆறவைத்து மறுநாளில் அங்கே
மிகமோக வயிரவனைப் பூசைசெய்து கொள்ளே. (26)

வயிரவனைப் பூசைசெய்து குப்பிதனை யெடுத்து
வாகாக வுடைத்துள்ளே பார்க்கவேசெந் தூரம்
ஒயிலான முருக்கம்பூ நிறமாக விருக்கும்
ஒன்றிலே பத்திரமாய் அடைத்துவைத்துக் கொண்டு
கயிலாச கிரிதனிலே ஓர்கழஞ்சி யுருக்கிக்
கடுகவதில் மஞ்சாடி செந்தூரம் கொடுக்கப்

பயிலரிய நிறைமாற்று ஒன்பதரை காணும்
　　பத்தர்வைத்த செம்புக்கு ஆறுகுறை யாதே. (27)

குறையாது செந்தூர விளைவதிகங் கண்டால்
　　கொடுப்பதுதான் கண்டறிந்து குறைவுசெய்ய வேண்டும்
நிறையாக விளைவுசற்றே குறைந்துவிட்டு தானல்
　　நிறையிலேகால் மஞ்சாடி கூட்டுவது நலமாம்
மறைநாலும் ஆராய்ந்து நந்திவகை யுரைத்தார்
　　வாக்கிதுதப் பாதுநிசம் அரனாணை யுண்மை
திறமான வாதி யென்றும் மாறாமலேதான்
　　செய்வதுநற் கருமமென்று செப்பியதொப்பனையே. (28)

21 முதல் 28 வரை உரை

இரசம் கழஞ்சு 60 கெந்தி 60 லிங்கம் 15 பொன்னரிதாரம் 50 மனோசிலை 2 சுத்தி செய்த நாகம் 40 தங்கம் 1 ஆக 228 கழஞ்சு. எல்லாம் எருக்கலம் பால் விட்டு 1 சாமம் அரைத்துப் பின்பு புரசிலை 1 சாமம் தும்பைச் சாறு 1 சாமம் செருப்படி 1 சாமம் செம் முள்ளி 1 சாமம் மாதுளம்பூ 1 சாமம் ஆக ஐந்து வகைச் சாறு விட்டு 5 சாமம் அரைத்துப் பின்பு காட்டு முருக்கம் பூச்சாறும் கலந்து விட்டு ஒரு சாமம் நன்றாய் அரைத்து நிழலுலர்த்திப் பொடியாக்கி எடுத்துக் கொள்க. காசிக்குப்பிக்கு ஏழுசீலைமண் செய்து உலர்த்தி வெடித்த இடத்தில் மண் தடவி மீண்டும் உலர்த்துக. அக்குப்பிக் குள் மருந்து முழுவதும் இட்டு (அரைக் குப்பியளவுதான் இருத்தல் வேண்டும்) மாக்கல் வட்டினல் மூடிச் சீலைமண் செய்க. ஒரு பானைக் குள் 4 விரல் அளவு மணலிட்டுக் குப்பியை அதனுள் நிறுத்திக் குப்பியைக் கழுத்தளவு மணலிட்டு அடுப்பேற்றி(த் தீபாக்கினியாக) விளக்கினளவு ஒரு சாமம் தாமைரப்பூவினளவாக 2 சாமம் (காடாக் கினியாய்) பெரு நெருப்பாக ஒருசாமம் ஆக 4 சாமம் எரித்து ஆற விட்டு எடுக்கச் செந்தூரம் முருக்கம்பூ நிறமாக இருக்கும்.

வெள்ளியை உருக்கி உருக்கு முகங் தெளிவு பார்த்து 1 கழஞ்சுக்கு 1 மஞ்சாடி செந்தூரம் கொடுக்க ஒன்பதரை மாற்றாகும். செந்தூரம்மிக்க செக்கர் நிறமாக விளைந்தால் 1 மஞ்சாடிக்குச் சிறிது சிறிது குறைத்து குறைத்துக் கொடுக்க; விளைவு நிறம் குறைந்தால் 1 மஞ்சாடிக்கு மேல் சிறிது மிகுதியாகக் கொடுத்துச் செம் பொன்னாக்குக.

நோய்களுக்கேற்ற துணை மருந்திற் கலந்து உள்ளே கொடுக்க மிகப்பல கடுமையான நோய்கள் நீங்கும். பொன்னைத் துரிசறுத்துச் செம்பொன்னுக்கும் மருந்து உடலின் துரிசு நீக்கிப் பொன் வண்ண மாக்கும். சரக்கு வகைகளையெல்லாம் கசடில்லாமல் சுத்தி செய்து நாகத்தையும் இரசத்தையும் தொந்தித்து மற்றச் சரக்குடன் சேர்த்து அரைக்க.

பாடவேறுபாடு–21–ஆம் பாடலில் கடைசி வரி "அன்பாக எண்பது கழஞ்சி" என்னும் பாடம் உண்டு அதன்படி அரிதாரம் 80 கழஞ்சு சேர்த்தல் வேண்டும். 22-ல், "வாகாக நாகமது கழஞ்சு சேர்த்து" என்ற பாடம் உண்டு அதன்படி நாகம் 1 கழஞ்சு சேர்த்தல் வேண்டும்.

உப்புக் கட்டு

உப்பினைக் கட்டவும் செம்பு சுத்தி செய்யவும் பொன் செய்யவும்

ஒப்பரிய சூதமுனி நந்தியுரை கேட்டு
உண்மகிழ்ந்தங் கவனுரைப்பான் உப்பையது கட்ட
அப்புமிகுங் கடல்நுரையைப் பொடியாக்கி யதிலே
அரைப்படிக்கு மூன்றுபடி உப்பதனைக் கூட்டிச்
செப்பரிய வெள்ளாட்டுச் சிறுநீரு விட்டுச்
சேர்த்தரைத்தோர் சட்டியின் உள்ளாக்கிப் பின்பு
தப்பாமல் மறுஓடு தான்கவிழ்த்தி மூடித்
தட்டெருவில் புடம்போட்டுத் தானெடுப்பதாமே (29)

எடுத்திடுபின் செம்புசுத்தி செய்யும்வகை கேளு
எப்படியென் றெண்ணுதே நீலமாம் பூவின்
கடுத்தகருங் காக்கணத்தின் இலையரைத்து வாங்கிக்
களங்கமறத் திரண்ட செம்பைத் தான்பொதிவு செய்து
அடுத்ததொரு அஞ்சுதிறம் முருக்கிலையே பின்னும்
அரியபுன்கம் வேரரைத்து அதனிலும்முன் போல
கொடுத்துருக்க ஈரஞ்சு திறத்திலே செம்பு
சுத்தியாம் சொன்னவகை சொல்லவுமொண்ணுதே. (30)

உரை: கடல்நுரைப் பொடி அரைப்படி, உப்பு மூன்றுபடி வெள்ளாட்டுச் சீறுநீர் விட்டரைத்துச் சட்டிக்குள் வைத்து மறு ஓடு கவிழ்த்தி மூடி மண்சீலை செய்து காயவைத்துக் குழிக்குள் கீழே 20 எருவடுக்கிச் சட்டியை வைத்து மேலே 20 எருவடுக்கிப் புடமிட்டு எடுத்துக் கொள்க.

நீலப்பூப் பூக்கின்ற கருத்த காக்கணத்தின் இலையை அரைத்துச் செப்புத் தகட்டிற் பொதிந்து 5 புடம். முருக்கிலையில் 5 புடம். புன்கம் வேரரைத்துப் பொதிந்து 5 புடம். பின்பு பலமுறை உருக்கி எடுத்துக் கொள்க. கட்டிய உப்பினைச் செம்பின் உருக்கு முகத்தில் கொடுக்க. செம்பு சுத்தியாகும். தாய் சேர்க்கப் பசும்பொன்னாகும்.

கந்தகக் கட்டு

சொல்லரிய கெந்தகத்தைக் கட்டும்வகை கேளு
　　தோகையர்கை உகிர்தனிலே வர்ணமதுஏறும்
நல்லமயி லாஞ்சியிலை யிடித்ததனை யரைத்து
　　நாட்டாவின் தயிர்தனிலே கலக்கவது செய்து
வில்லைபோல் ஒருஓடு வட்டமுடன் செய்து
　　வெளிநடுவில் நாலாறு துவாரமது இட்டு
கொல்லவே கெந்தகமும் அந்தவோட் டினிலே
　　குழிதனிலே ஓர்கலசம் மேல்வைத்துக் காணே. (31)

காணவைத்த கலசமதில் கவசமது செய்து
　　கால்விரல் குறையவிட்டுக் கலசமேல் வாயில்
தோணவைத்த கந்தகத்தை யோட்டில் இட்டுத்
　　தோணமல் மறுவோடு கவிழ்த்தி மூடிக்
காணமற்றக் குழிமறைய மண்ணுமே விட்டுக்
　　காட்டாம லெருவடுக்கிக் கனலதனை முட்டி
பூணவைத்து இப்படியே ஈரஞ்சு வட்டம்
　　புடத்திலிட்டுக் கட்டிய கந்தகத்தைச் சேரே. (32)

சேரப்பா நாகமஞ்சு கழஞ்சு கொண்டு
செப்பெனவே கிண்ணமொன்று செய்த பின்பு
தேரப்பா அரிதாரம் சாதி லிங்கம்
திறமான பச்சைநிறத் துரிசுடனே யிரதம்
காரப்பா கட்டிவைத்த கெந்தகத்தைக் கூட்டிக்
கண்டுகொள்ள வகைதனக்கு ஒவ்வொரு கழஞ்சு
சாரப்பா ஐங்கழஞ்சு குழிக்கல்லி லிட்டுத்
தளவாய்நீர் விட்டரைத்துக் குழம்பாகக் கூட்டே. (33)

கூட்டியந்தக் குழம்புதனைக் கிண்ணமதி லுள்ளும்
குவிந்தபுறந் தனிலுமதைச் சாந்துபோல் பூசி
நாட்டியல்வாய்ச் சட்டிவைத்து மூன்றுபடி உப்பை
நாகபடம் போல்குவிந்த சட்டிக்கு ளிட்டு
வீட்டியல்வாய்ச் சட்டியது மேலாகக் கிண்ணம்
விளிம்புசற் றேகாண வெளிநடுவில் புதைத்து
தாட்டிமையாய்க் கிண்ணமதில் விளிம்புதான் மறைய
சார்வாகத் துணிமண்செய்து மணலடுப்பில் ஏற்றே. (34)

அடுப்பிலே வைத்தவுடன் ஐங்கரற்குப் பூசை
அன்பாகச் செய்துகொண்டு நலத்தேக்கின் இலையைக்
கடுகவே இடித்ததிலே நவச்சார மிட்டுக்
கலப்பில்லாத் தனிச்சாறு மூன்றுபடி யெடுத்துத்
தொடுப்பாக வனல்மூட்டி யெரியிடுமவ் வேளை
சுருக்காகச் சலமூன்று படிவற்றிப் பின்பு
வெடுப்பாக எரித்திடுநீ பதினஞ்சு கடிகை
வெந்தாறி யெடுத்திடு செந்தூர மாமே. (35)

செந்தூரந் தனையெடுத்து முன்னாக வைத்துச்
சிவகாமி பூசனையும் அருச்சனையுஞ் செய்து
அந்தரங்க மாயொன்றில் அடைத்துவைத்துக் கொண்டு
ஆறவைத்த வெள்ளிபண வெடையேழு கூட்டிச்

சிந்தனையாய்ச் சுத்திசெய்த செம்புதனில் மூன்றும்
சேர்த்துஒரு கழஞ்சியதாய் உருக்கியபின் னெடுத்து
வந்தனையாய்ப் பின்னுமதை உருக்குமுகந் தெளிந்தால்
வைத்திருக்கும் செந்தூரம் மஞ்சாடி சேரே (36)

மஞ்சாடி சேர்த்திடமாற் றேழரையும் காணும்
மாதவத்தோன் சூதமுனி வாக்கிதுதப் பாது
அஞ்சாதே பரமகுரு ஆணையுண்டு நிசமே
அதுவறிந்தால் துரிசுசெம் பாகும்வகை கேளு
மிஞ்சவே வெங்காரம் துரிசுமொன்றாய்க் கூட்டி
வெண்ணெய்தனி லேயரைத்துக் குடகரியில் வைத்துத்
துஞ்சவே உருக்கவந்தத் துரிசினிலே பாதி
சுத்தியுள்ள செம்பிருக்கும் சொல்ல இன்னங் கேளே (37)

கேளப்பா இன்னுமந்த நாகமதின் வகையைக்
கெடியாக இலுப்பைநெய் யதனைவைத்துக் கொண்டு
நாளப்பா இருக்குமந்த நாகத்தை உருக்கி
நாலுவட்டம் எண்ணெயிலே சாய்த்துப்பின் னெடுத்தால்
தூளப்பா லேகடந்து நாகம்வெளுத் துப்போம்
சுத்தியாய் இருக்குமதில் கழஞ்சுபதி னைஞ்சு
ஆளப்பா வில்லையின்காய்க் குடுக்கையுமூ டியுமாய்
அடைவாகச் செய்திரத மடையொப்பா யடையே. (38)

அடைத்திடுநீ பத்திலொன்று தங்கந்தான் கூட்டி
அதற்கிணங்கக் குகைதனையுண் டாக்கியந்தக் குகைக்குள்
உடைத்தகல்லுப் பிந்துப்பு நவாச்சாரம் தானும்
உள்ளுறவே மூன்றெடையுஞ் சமனாகக் கொண்டு
புடைத்தெழுந்த வெலுமிச்சம் பழச்சாற்றி லரைத்துப்
பூணவே யொருபங்கு குகைக்குள்ளே பூசி
சடைத்திடா தேகுகையை வெயிலிலே வைத்துத்
தப்பாம லேகுகையை வேறுவைத் துணர்த்தே. (39)

உணர்த்தியெடுத் தம்மருந்தைப் பொடியாக்கிக் குகைக்குள்
ஒருவிரற் கனமாகப் பொடிபரத்தி யிட்டு
இணக்கமாய்க் குடுக்கைதனைப் பொடியதன்மேல் வைத்து
இறையளவு மதின்மேலும் பொடியதனைப் பரப்பி

வணக்கமுடன் மண்சில்லால் வாயதனை மூடி
வகையாகக் குகைக்கேழு துணிமண்ணுஞ் செய்து
பிணக்கறவே குகையுணர்த்தி வெடித்தஇடம் தனக்குப்
பின்னுமந்த மண்பூசிப் பிடத்திடமுஞ் செய்யே. (40)

பிடமாக வொருமுழத்தில் தணிவாக நீளம்
பிந்தாதே குழியெடுத்துப் பாதிப்பிடம் எருவைப்
படமாக வடுக்கியதின் மேற்குகையை வைத்துப்
பாங்காகக் குழிமறைய மேலும்எருப் பொதிந்து
அடைவாக எரிமூட்டி யேழுநாள் வரைக்கும்
ஆறுதே புடத்திலிட் டாற்றிநீ யெடுத்துத்
திடமாகச் செந்தூர மிருக்குமதை யெடுத்துத்
தீர்க்கமுற வயிரவற்குப் பூசை மிகச் செய்யே. (41)

தீர்க்கமுற வயிரவற்குப் பூசை செய்த பின்பு
செந்தூரந் தனைப்பரணி சிமிழில்வைத்துக் கொண்டு
ஆர்க்கமுடன் ஒருகழஞ்சி வெள்ளிதனை உருக்கி
அதினிடமாய்த் தெளிவினிலே பணவெடைசெந் தூரம்
ஏர்க்கையாய்க் கொடுக்கையில்மாற் றெட்டரையுங் காணும்
ஈசுரர்மேல் ஆணையிது தப்பாது உண்மை
நீர்க்கமென்று நினையாதே சூதமுனி உரைத்தார்
நிசமாக வுண்டாகு மின்னவகை கேளே. (42)

கெந்தகத்தயிலம்

உண்டாகுங் கெந்தகத்தைத் தயிலவகை கேளு
ஊரிலுள்ள ஞாணியண்டம் ஐம்பதுதான் எடுத்து
விண்டந்த வெள்ளத்தை விட்டாவி யேத்தி
வெண்கருவை நீக்கி மஞ்சட் கருவாக வெடுத்து
தண்டாகுஞ் சட்டியிலே யிட்டடுப்பி லேத்தித்
தணிவாக வெரிமூட்டீ ராவியினல் கருக்கப்
பண்டாதி யருளாலே வருந்தயிலந் தன்னைப்
பண்பாக வெடுத்தபின்பு கெந்தகத்தை வாங்கே. (43)

கெந்தகத்தை மூன்றுபங்கு பசுவினெய்யிற் பாலிற்
கெட்டியாக முன்போலே சுத்தியது செய்து
சிந்தாதே பொடிசெய்து சீலைதனிற் பரப்பித்
திரியாகத் திரித்தண்டத் தயிலத்திற் றுவைத்து
பந்தமாய் அனல்மூட்டித் தலைகீழாய்ப் பிடித்துப்
பாத்திரத்தைக் கீழ்வைத்துப் பாங்காக வேந்தி
வந்ததொரு தைலத்தை யொன்றிலே யடைத்து
வாகாகப் பின்னுமொரு வகைபகர லாமே. (44)

கருவாக இந்தமுறை யறிந்திருந்த பேர்கள்
களங்கமுடன் நிறுத்துமாத் துக்குறைந்த பொன்னை
உருவாக வேயிந்தத் தயிலமதிற் பொன்னை
உள்ளாக்கி யெடுத்துவைத்து ஒருதரம்தான் உருக்கத்
திருவாக நிறம்பசுமை யாகிமாற் றேறும்
செப்பினேம் பின்னுமதில் செய்யும்வகை கேளு
துருவான சொறிசிரங்கு நோய்வாதை தனக்குத்
துளசியிலை தனிற்கொடுத்துத் தொகுத்துநீ பாரே. (45)

உரை

31 முதல் 42 முடிய கந்தகக்கட்டு, கந்தகச் செந்தூரம் ஏழரை மாற்றுப்பொன். துரிசுச் செம்பு, நாகரச தங்கச் செந்தூரம், கெந்தத்தயிலம்.

ஒரு சிறு பானையின் வாயளவாக வட்டமான ஓடு ஒன்று உரைத்து எடுத்து அந்த ஓட்டின் நடுவே சிறியதாக 24 துளையிட்டுப் பானைவாயிற் பொருத்தி அதன் மேல் கந்தகத்தைப் பரத்துக. முதலில் பானைக்குள் மருதோன்றியிலையை இடித்து அரைத்துப் பசுவின் தயிரில் கலக்கிய கலவையை ஊற்றி வைத்துக்கொள்க. பின்பு கந்தம் வைத்த ஓட்டின் மேல் வேறு ஒரு வட்டச் சட்டியைக் கவிழ்த்து மூடிச்சீலை செய்து குழிக்குள் வைத்து மேலே மண்ணால் மூடி மறைத்து மேலே எருவடுக்கிப் புடமிடுக. கந்தகம் உருகிப் பாலில் இறங்கி நிற்கும் இங்ஙனம் பத்து முறை செய்தால் கந்தகம் கட்டும். பின்பு ஐந்து கழஞ்சு நாகத்தில் செப்புப் போல்

கிண்ணம் செய்து கொள்க. அதன்பின் அரிதாரம் சாதிலிங்கம் துரிசு இரசம் கட்டிய கந்தகம் ஆகிய ஐந்தையும் குழிக்கல்லில் இட்டுச் செயநீர் விட்டரைத்துக் குழம்பாக்கிக் கிண்ணத்தினுள்ளும் மூடியின் உள்புறத்தும் சாந்துபோல் பூசுக. ஒரு சட்டியினுள் மூன்றுபடி உப்பை இட்டு அதன் மேல் கிண்ணத்தை வைத்துக் கிண்ணத்தின் விளிம்பு மறையத் துணி மண் செய்து அடுப்பி லேற்றுக. பின்னர் நல்ல தேக்கின் இலையில் நவச்சாரம் சேர்த்து உரலிலிட்டு இடித்து மூன்றுபடி சாறு எடுத்து உப்பிட்ட சட்டியினுள் ஊற்றி எரியிடுக. மூன்றுபடி சாறும் வற்றியபின் விரைவாகப் பதினைந்து நாழிகை எரித்து ஆறவிட்டெடுக்கச் செந்தூரமாகும். வெள்ளி ஏழு செம்பு மூன்று தாய் ஒன்றுடன் சேர்த்து உருக்கி ஒரு மஞ்சாடி செந்தூரம் சேர்க்க ஏழரை மாற்றாகும். மேலும் துரிசுச் செம்பு அறிக. வெங்காரம் துரிசு இரண்டும் ஒன்றாய்ச் சேர்த்து வெண்ணெய் சேர்த்து அரைத்துக் குடகரியில் வைத்து உருக்க, வைத்த துரிசின் பாதியளவு நல்ல செம்பு கிடைக்கும். நாகத்தை உருக்கி இலுப்பை எண்ணெயில் நாலுமுறை சாய்த்து எடுத்து ஒருவில்வக்காயளவு குடுக்கையும் மூடியுமாகச் செய்க. பதினைந்து கழஞ்சியுள்ளதாக அந்த நாகக்குடுக்கை அமைதல் வேண்டும். அதனுள் 15 கழஞ்சு ரசம்விட்டு ஒன்றரைக் கழஞ்சு தங்கமும் சேர்த்து மூடுக. அந்த வில்வக்காயளவுள்ள நாகக்குடுக்கையை உட்கொள்ளும் அளவு ஒரு குகை உண்டாக்கி அதற்குள் கல்லுப்பு இந்துப்பு நவாச்சாரம் மூன்றும் ஓரளவாய் எடுத்து எலுமிச்சம் பழச் சாறுவிட்டு அரைத்து எடுத்து ஒரு பங்கினைப் பூசி மற்றப் பங்கினைக் காயவைத்துத்தூளாக்கிக்கு கைக்குள் ஒரு விரற்கடை பரப்பிக் குடுக்கையை வைத்து மேலும் தூளிட்டு மேலே சில்லோடுகொண்டுமூடி எழுசீலை மண் செய்து உலர்த்தி வெடித்த இடத்துக்கு மண் பூசி உலர்த்தி முழப்புடத்திலிட்டு மேலுமியிட்டு 7 நாள் வரை ஆறாமல் புடமிட்டு எடுக்கச் செந்தூரமாம். எடுத்து வைத்துக் கொண்டு வயிரவர்க்குப் பூசை செய்க. ஒரு கழஞ்சு வெள்ளியை உருக்கி 4 குன்றி எடை செந்தூரம் கொடுக்க மாற்று எட்டரையாகும்.

ஈசுரர் மேலாணையிது தப்பாது உண்மை.

இனி கெந்தகத் தயிலம் காண்க

ஐம்பது கோழி முட்டையை அவித்து உடைத்து வெண் கரு நீக்கி மஞ்சட் கருவை எடுத்து இருப்புச் சட்டியிலிட்டு வறுத்துப் பருவத்தில் தைலம் எடுத்துக்கொள்க. கெந்தகத்தைப் பசுவின் நெய்யிலும் பாலிலும் முன்போல் சுத்தி செய்து தூளாக்கித் துணியிற் பரத்தித் திரியாகத் திரித்து முட்டைத் தைலத்தில் தோய்த்துக் குறட்டினுல் பிடித்துக் கொண்டு தீ மூட்டிக் கீழே ஒரு கலம் வைத்துப் பாங்காக ஏந்தி வந்த சுடர்த்தைலத்தை எடுத்து ஒரு குப்பியில் ஊற்றி தைத்துக் கொள்க மாற்றுக் குறைந்த பொன்னைத் தயிலத்தில் போட்டு வைத்திருந்து எடுத்து உருக்க நிறம் பசுமையாகி மாற்று உயரும். துருவான சொறி சிரங்கு மற்றும் பல நோய்வாதைகளுக்குத் துளசிச் சாற்றில் கொடுக்க.

வங்கச் செந்தூரம்

ஏழரை மாற்றுப் பொன் செய்யவும் இளைப்பு இருமல் மேகம் முதலியவற்றிற்கும்.

தொகுத்துநீ பார்க்கவென்ருல் வங்கவகை தனிலே
சுருதியுள்ள செந்தூரம் சொல்லுவேன் கேளு
வகுத்தபடி வருடம்நூற் றிருபது தான் சென்ற
வளமாக நிற்குமந்த வேம்பினுட பழத்தை
வெகுத்தமுடன் கொண்டுவந்து இடித்ததன்சா றெடுத்து
வேறுகலப் பில்லாமல் விரும்பிவைத்துக் கொண்டு
பகுத்ததிலே பின்னுமொரு பாத்திரத்தை வாங்கிப்
பாங்காகக் கருவங்கம் உருக்கியதில் சாயே. (46)

உருக்கியந்த வங்கத்தை மூவேழு வட்டம்
முன்சொன்ன சாறதிலே தானுருக்கிக் கொண்டு
தருக்கியே யெடுத்ததிலோர் சட்டியிலே யிட்டுத்
தாளகமுந் தான்கூட்டித் தனித்தடுப்பி லேற்றி
நெருக்கிநா யுருவிக்கம்பில் வறுத்துவங்கம் நீற்றி
நேர்குமரிச் சாற்றிலொரு சாமந்தான் அரைத்துத்
திருக்கிசைந்த குகைக்குளிட்டு எருவிலே வைத்துச்
சேவலின் புடமாக இடுவதுவு மாமே. (47)

சேவலந்தப் புடமாகத் தினமிரண்டு வட்டம்
திறமாக முன்சாற்றி லரைத்துமிரு பதுநாள்
ஏவலுடன் புடம்கெசம்பத் தொன்றுகுறை யாமல்
இட்டிடவே செந்தூரம் முருக்கம்பூ நிறமாம்
ஆவலுடன் ஒருகழஞ்சு வெள்ளிதனை யுருக்கி
அதுதெளிவில் பணவெடைசெந் தூரமது கொடுக்க
நீவலிமை யாகமாற் றேழரையுங் காணும்
நின்மலமாந் திருவாணை வங்கவகை யிதுவே. (48)

உரை: நூற்றிருபது ஆண்டு கடந்த வேம்பின் பழத்தைக் கொண்டுவந்து, இடித்துத் தனிச் சாறு எடுத்துக் கருவங்கத்தை உருக்கி இருபத்தொரு பங்கு வைத்த சாற்றில் 21 முறை சாய்த்து எடுத்து, அடிகனத்த செந்தூரச் சட்டியிலிட்டு. அடுப்பேற்றித் தாளகமும் சிறிது சிறிது தூவி நாயுருவிக் கம்பால் வறுத்து நீற்றிப் பின்பு சோற்றுக் கற்றாழைச் சாறுவிட்டு ஒருச்சாம நேரம் அரைத்துக் குகையிலிட்டுச் சேவற்புடமாகப் போடுக. ஒரு நாளைக்கு இரண்டு புடமாக 20 நாள் நாற்பது முறை சேவற் புடமிட்டுப் பின்பு கெசபுடம் பத்தும் ஆக 51 புடமிட்டால் செந்தூரம் முருக்கம்பூ நிறமாம். ஒருகழஞ்சு வெள்ளியில் நாலுகுன்றி எடை செந்தூரம் உருக்கு முகத்தில் கொடுக்க மாற்று ஏழரை. நெய்யில் வெண்ணெய்யில் குன்றி எடை கொடுக்க மேகநோய், மூச்சுவாங்கும் இளைப்பு, சொறி, புண், இருமல் முதலியன நீங்கும். நோய்களை நீக்கும் முறைக்கும் சிறந்தது.

ஆவரைப் பட்டைத் தயிலம்

ஏழரை மாற்றுப் பொன் செய்ய

இது தனிலுஞ் சுருக்காக இன்னமொரு வகைகேள்
இந்நிலத்தி லாதிமருந் தாவரையின் பட்டை
ததிகொண்டு வந்துலர்த்திப் பானைதனி விட்டுத்
தாழவே யக்கணந் தயிலமது தன்னை
மெதுவாக இறக்கியதை விரும்பி வைத்துக் கொண்டு
மேலான கோழிமுட்டை வெண்கருவை யதிலே
மதுவாக வுடைத்தபின்பு வடித்ததனைக் கலந்து
வசமாக்கிச் செய்தபின்பு அரிதாரம் வாங்கே. (49)

வாங்கியே அரிதாரம் தட்டத்தில் தயிலம்
வாகாக வேபுரட்டி வெயிலில் வைத்தால்
பாங்கான செந்தூரம் ஆகுமதை யெடுத்துப்
பசுமையாய் வைத்தவெள்ளி தன்னிலொரு கழஞ்சு
ஏங்கியே யுருக்கியது பணவெடைசெந் தூரம்
ஏற்கவே கொடுக்கமாற் றேழரைதப் பாது
நீங்காதே சூதமுனி உரைத்தமொழி யுண்மை
நிசமாகுங் கண்டறிந்து தெளிந்ததனைப் பாரே. (50)

உரை:— ஆவரை வேர்ப் பட்டையைக் கொண்டு வந்து உலர்த்திப் பானையிலிட்டுக் குழித் தயிலம் இறக்கிக் கோழிமுட்டை வெண்கருவை அதில் ஊற்றிக் கலக்கி ஒரு தட்டத்தில் ஊற்றி வைத்துக் கொண்டு, அரிதாரம் சுத்திசெய்து அத்தயிலத்தில் புரட்டி வெயிலில் வைக்கச் செந்தூரமாகும் வெள்ளி கழஞ்சி யொன்றுக்கு 4 குன்றி யெடை செந்தூரம் கொடுக்க ஏழரை மாற்றாகும்.

அநுப்பானத்தில் கொடுக்க காசம், இருமல் முதலிய பலவகை நோயும் நீங்கும்.

பா. வே. ஆதி மருந்தாவரை என்ற பகுதியில் ஆதி மருதாவரை என்ற பாடமும் ஒரு சுவடியிலுளது. ஆதி மருந்து — முதன்மையான மருந்து. ஆத்தி, மருது, ஆவரை என்ற பாடம் உண்டோ எனவும் ஆராய்க. ஆவரைப் பட்டைத் தயிலம் என்று சுவடியில் தலைப்பு உளது.

கெந்தக மெழுகு

ஏழரை மாற்றுப் பொன் செய்ய, கிரந்திப் புண், சூலைப் புண், கருங்குட்டம், உடம்பிலுள்ள புள்ளி, பூச்சி, பற்பாம்புத் தடிப்பு, வெடி சிரங்கு சொறி ஆகிய நோயை நீக்க.

பாரப்பா கெந்தகத்தின் மெழுகதனைச் சொல்வேன்
பண்டிதமே பார்க்க வென்று விதையுந்தான் பாரு
வாரப்பா வெள்ளாட்டுக் கொழுப்பு நெய்யை
வாங்கியே அயக்கரண்டிக் குள்ளே யிட்டு

சேரப்பா கெந்தியது பலமும் மூன்று
தீயிலே வைத்தூதி யுருக்கி நன்ருய்க்
காரப்பா கண்டங்கத் திரிப்பழச்சாற் ருலே
கைமுறையாய்ப் பதினைந்து தரந்தான் சாயே. (51)

சாய்த்தபின்பு அதைநீகுட்டித் தக்காளிச் சாற்றில்
சாய்த்திடுவாய் முன்போலே பதினைந்து தரம்தான்
தோய்த்தெடுத்த பின்குமரிச் சாற்றிலுமப் படியே
தொகைநாற்பத் தஞ்சுதரம் மூன்றுவகைச் சாற்றில்
ஏய்த்திடவே சாய்க்கவே மெழுகாகுஞ் சொன்னேன்
இதையெடுத்துப் பரணிதனி லேயடைத்துக் கொண்டு
வாய்த்திடவே ரசிதத்தை ஐம்பதெடை யுருக்கி
மயனமோர் எடை கொடுக்க மாற்றுமே ழரையே. (52)

ஏழரையாம் இம்மெழுகில் பணவெடைகால் எடுத்து
ஏற்கவே பரங்கிப்பட்டைச் சூரணத்தில் நாளும்
நாளிருப திருபோதும் தவருதே கொடுக்க
நாட்டோர்க்கு வருகிரந்திப் புண்சூலைப் புண்ணும்
பாழாகுங் கருங்குட்டம் தேகம்புள்ளி பூச்சி
பற்பாம்புத் தடிப்பும்வெடி சிரங்குசொறி யிவைகள்
தூளாகப் பறந்தோடும் பொன்போலாம் உடம்பு
தொடர்ந்துபுளி புகையிலையுந் தள்ளிவிடச் சொல்லே. (53)

உரை: 3 பலம் கெந்தியை வெள்ளாட்டு நெய்யில் சிறிது சிறிது விட்டு உருக்கிக் கண்டங்கத்தரிப் பழச் சாற்றில் 15 தரம் குட்டித் தக்காளிச் சாற்றில் 15 தரம் சோற்றுக் கற்ருழைச் சாற்றில் 15 தரம் ஆக 45 முறை சாய்க்கக் கெந்தி மெழுகாகும். வெள்ளியில் 50க்கு ஒன்று கொடுக்க 7½ மாற்றுச் செம்பொன்னுகும் 1 குன்றி எடை பரங்கிப் பட்டைச் சூரணத்தில் 20 நாள் நாற்பது வேளை கொடுக்கக் கிரந்திப் புண், சூலைப் புண், கருங்குட்டம், உடலிற் புள்ளி, பூச்சி, பாம்புகடித்த வீக்கம், சிரங்கு, சொறி தீரும்.

54 முதல் 63 முடிய கெந்தித் தயிலம்

பத்தரை மாற்றுப் பொன் செய்யவும், உடலிலுள்ள புழு, பூச்சி குட்டம் தீரவும், மூக்கிலுள்ள மக்குநிறம், தேமல், இருமல், மொழிச் சூலை விசக்கடி, விசநீர்ப் புண், பொல்லாத புற்று, அரையாப்புப் புண்கள், குறைநோய், வெள்ளைக் குட்டம், இந்திரகண்டி, முயலகன் ஆகிய வலிப்பு நோய்கள், மாதர்ப்புற்று முதலிய பல நோய் களுக்கும்.

சொல்லுவேன் சூதமுனி நந்தியுரைப் படியே
சுருக்காக இன்னமுந்தான் கெந்தகத்தின் தயிலம்
வல்லமையாய்ச் சுத்திசெய்த கெந்திபலம் எட்டு
மயங்காதே கல்வத்தில் பொடியாகச் செய்து
கொல்லவே ஈருள்ளிக் காய்ச்சாறு ழாக்குக்
கொடுக்கவே சுருக்காகக் குறுகவிட்டே யரைத்துச்
செல்லவே யொருச்சாமம் நன்றாக ஆட்டிச்
சிதறாமல் வைத்துவைத்து மறுநாளும் கேளே. (54)

மறுநாளும் சாமம்ஒன்று சாறுழாக்கு
வற்றவற்ற விட்டரைப்பாய் கையோ யாமல்
செறுகாலே தினந்தோறும் அரைப்புச் சாமம்
செப்பினேன் சாறுழாக்குக் கொண்டு
குறுகாதே யிப்படியே நாற்பத் தோர்நாள்
கூர்ந்தெடுத்துப் பதத்தோடே யரைத்துமெழு கெல்லாம்
வெறுகாமல் மெழுகெல்லாம் ஓரளவே யாக
மிளகளவாய் ஒழுங்காக வில்லயது கட்டே. (55)

கட்டியே நிழலுலர்த்தாய் நாலு நாள்தான்
கதிரினிலும் காற்றினிலும் மூன்றுநாள் தான்
திட்டமாய்ச் சுக்காகக் காய்ந்த வில்லை
சிறுகலசத் தினிலடக்கிக் கவசவாய்க்கு
மட்டளவாய்ச் சிட்டிசெய்து வாயிணக்கி மூடி
மண்ணேமு சந்துவாய் மறையவே பூசிச்
சட்டமாய் மேல்கவிழ்க்குஞ் சட்டித் தூரில்
தமரொருமுன் றிட்டதற்குத் தக்ககுழி கிள்ளே. (56)

குழிகிள்ளிக் குளிக்குள்ளே சேறும் பண்ணிக்
குழிவாய்க்கும் பீங்கானை நடுவே வைத்து
வெளியாமல் வாயோடு சட்டி தன்னை
நீங்கல்இல் லாமலே பதித்து மூடி
வளிப்பட்டாய் வாயோடு கழுத்து மட்டும்
மண்ணும் சாணமும் பிசைந்து ஏத்தித்
துளிவிழா வாயோட்டில் சிறிய சட்டித்
தூரிலே தமரிட்டுத் துரும்பை வையே. (57)

துரும்பிட்ட சிறுசட்டி வாயோட் டின்மேல்
சோராமல் மலர்த்திவைத்துச் சந்து வாய்க்குத்
திருந்தவாய் மண்பூசிச் சீலை செய்து
திறமாகச் சிறுசட்டிக் கழுத்து மட்டும்
பொருந்தவே சாணிமண்ணும் பிசைந்து ஏற்றிப்
புகைபொசியா மல்எங்குங் கெட்டி பண்ணி
மருந்தடைத்துச் சிட்டியிட்ட கலசந் தன்னை
மையத்தில் தமர்நிற்கக் கவிழ்த்து மூடே. (58)

மூடியே சிட்டியின்கீழ்க் கலச வாய்க்கு
முன்போலே சீலைமண்ணும் முறையாய்ச் செய்து
நாடியே சிட்டியின்மேல் கழுத்து மட்டும்
நன்றாகச் சாணிமண்ணும் ஏற்றிப் பூசி
போடுநீ பொடிமணலை விரற்கனமாய் எங்கும்
பூமிமட்டுஞ் சரியாகப் பரத்தி யிட்டுத்
தேடுநீ எருவுமியும் கலசந்தான் மறையச்
சிறுகவொடித் திட்டதின்மேல் தீயைப் போடே. (59)

தீமூட்டித் தேவியைநீ பூசை பண்ணு
சிதம்பரத்தைத் தியானித்துத் தெண்ட மிட்டு
நேயவிரு சாமம்வரைப் புடமாய் வெந்து
நீறியே ஆறியபின் எடுத்துப் பார்க்கத்
தூயதொரு தேன்போல தயிலந் தானும்
துளைவழியே பீங்கானில் இறங்கி நிற்கும்
வாயமாய்க் குப்பிக்குச் சீலை செய்து
வாங்கியே தைலத்தை யடைத்து வையே. (60)

வைத்திருக்குந் தைலத்தின் மகிமை சொல்ல
வாயுமுண்டோ நாவுமுண்டோ மாணுக் காகேள்
பொய்த்திட்டம் போக்கிதல்லோ தேவி நாதம்
பொருளாக வேணுமென்ருல் பணவெடைதங் கத்தை
மெய்த்திடவே யுருக்குமுகந் தெளிவு பார்த்து
மேலான தைலமொரு துரும்பில் தோய்த்து
கைத்திட்ட மாக்கொடுக்கச் செம்பே யாகும்
கைலாச கிரிஎடைநாற் பதுக்குத் தாக்கே. (61)

தாக்கியே உருக்கியிடத் தசமாற் ருகும்
தாரணியோர்க் குக்கரிய சீரகச்சூ ரணத்தில்
தூக்கியே தைலமொரு பணவெடையுங் கூட்டித்
தொந்தித்து இருபதுநாள் இருநே ரந்தான்
ஆக்கியே கொடுக்கவதில் தீரும்வியா திகேள்
ஆக்கைதனில் உள்ளபுழுப் பூச்சி குட்டம்
மூக்கிலே நின்றிருக்கும் மக்கிருமல் தேமல்
மொழிமொழிக்குக் கட்டியதோர் சூலேயுமே போமே. (62)

போகுமே விசக்கடிகள் விசநீர்ப் புண்கள்
பொல்லாத புற்றும்அரை யாப்புப் புண்கள்
ஏகுமே குறைகளெல்லாம் வெள்ளைக் குட்டம்
இந்திரகண்டி முயலகனும் மாதர்ப் புத்து
வேகுமே தைலத்தின் வாடை பட்டால்
வெகுதூரம் ஓடுமடா பத்தியமே வேணும்
நாகமே தரித்தசிவன் ஆணை சொன்னேன்
நந்தியுரை தப்பாது நவின்றிட் டேனே. (63)

54 முதல் 63 முடிய உரை

கெந்தித் தயிலம்

தூயதாக்கிய கெந்திபலம் 8 எடுத்துக் கல்வத்திலிட்டுத் தூளாக்கி ஈருள்ளிச் சாறு ஆழாக்கு சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்துக் கொள்க. இங்ஙனம் நாள் தோறும் சாறுவிட்டு நாற்பத்தொரு நாள் அரைத்துப்பின்பு மிளகு அளவாக வில்லே

தட்டி நிழலில் நான்கு நாள் உலர்த்தி வெயிலிலும் காற்றிலும் 3 நாள் உலர்த்துக. ஒரு பழகிய மண் கலயத்தில் அடியில் மூன்று சிறு துளையிட்டுத் துளையில் சிறு துரும்பு செருகி கலயத்தினுள் ஒரு வட்டமான ஓடு கொண்டு துளைவாயை மூடுக. ஓட்டைச் சுற்றிச் சிறிது வெளி இருக்கும். அதன் மேல் கெந்தக வில்லைகளைப் பரப்பிக் கலசத்தின் மேல் ஒரு சிட்டி கொண்டு மூடி எழுசீலை மண் செய்க. கலயத்தின் கீழ்த் துளைகட்கு நேரே ஒரு கோப்பையைப் பொருத்தி கலசத் தூருக்கும் கோப்பையின் வாய்க்கும் சீலை மண் செய்க. ஒருகுழி கிள்ளி அதற்குள் சாணமும் மண்ணும் பிடைத்து போட்டு அதன் மேல் கோப்பையின் அடி குளிரும்படி வைத்துச் சுற்றிலும் சாணமும் மண்ணும் பிசைந்து கலசவாய் வரைப் போட்டு அதற்குமேல் சிட்டிக்கு மேல் விரல் கனம் வரை மணலிட்டு அதன் மேல் உமியும் எருவுங் கலந்து போட்டுப் புடமிடுக. இருசாம நேரம் வரைப் புடமிட்டுப்பின் நன்ருய் ஆறியவுடன் எடுத்துப் பார்க்கத் தேன்போல தயிலம் கோப்பையில் நிற்கும். எடுத்துக் குப்பியில் அடைத்து வைத்துக் கொள்க. நாலுகுன்றி எடை தங்கத்தைக் குகையிலிட்டு உருக்கித் தயிலத்தை யொருதுரும்பில் தோய்த்து உருகி நிற்கும் தங்கத்தில் துளிக்கவிகட்டுப் பார்க்கத் தங்கம் செம்பாகமாறும். அதனை 160 குன்றி எடை வெள்ளியுருக்கு முகத்தில் கொடுக்கப் பத்துமாற்றுச் செம்பொன்னுகும்.

கருஞ் சீரகத்தைத் தூள் செய்து ஓரளவு எடுத்துக் கொண்டு அதில் நாலுகுன்றி எடைத் தயிலம் சேர்த்து இருபது நாள் நாற்பது வேளை கொடுக்க உடலிலுள்ள புழு பூச்சி குட்டம் மூக்கிலே படரும் மக்கிருமல் தேமல் மொழிக்கு மொழி கட்டி நிற்கும் சூலைக் கட்டுக்கள் விசக்கடிகள், விசநீர்ப் புண்கள், பொல்லாத புற்று, அரையாப்புப் புண்கள், குறைநோய், வெண் குட்டம், இந்திர கண்டி, முயலகன், மாதர்க்கு வரும் புற்று ஆகிய நோய்கள் நீங்கும். பத்தியங்காக்க.

64 முதல் 69 முடிய சூதக்குளிகை

நவின்றிடுவேன் சூதமுனி குளிகை யொன்று
நல்லோர்கள் தமக்காக வேண்டி யேதான்
கவின்றிட வேவிளாங்காய் அளவி லேதான்
கரண்டகமொன் றிரும்பாலே யுண்டு பண்ணி

சவின்றிடவே முன்சொன்ன வாலேரசம் தன்னைத்
தவிராது பதின்கழஞ்சு கரண்டகத்தி விட்டு
உவின்றிடவே மணிப்பாலேப் பாதி மட்டும்
ஊட்டியே மேல்மூடி சேர்த்து மூடே (64)

சேர்த்துநீ மூடியபின் சந்து வாய்க்குச்
சீலேமண் ணேழுசெய் துலர்த்தி நன்ருய்
பார்த்துநீ ஓரெருவிற் புடத்தைப் போடு
பதருமல் ஆறியபின் சீலே மண்ணைப்
பேர்த்துநீ எடுத்துமுன் போல மணிப் பாலேப்
பின்னும்அரை வாசியிட் டரைமண் பூசிக்
கோத்துநீ இரண்டெருவில் புடத்தைப் போடு
குளிரவே யாறவிட் டெடுப்ப தாமே. (65)

எடுத்தெடுத் திப்படியே புடந்தோ றுந்தான்
எரியேற்றிப் போடப்பா பத்து மட்டும்
அடுக்கடுக்காய் மணிப்பாலே விட்டு விட்டு
அஞ்சாதே புடம்போடச் சன்னிக் கும்பார்
முடுக்காகச் சன்னித்த பதத்தைக் கண்டு
மூட்டப்பா மணிப்பாலே முங்க விட்டுத்
தொடுப்பாகக் கனபுடமே போடு சொன்னேன்
சூதமொன்ருய் உருகியுள்ளே மணியாம் பாரே. (66)

மணியான தறியவென்ருல் திரளும் போது
மதயானைக் கன்றதுபோல் வீறிட் டேசாம்
துணிவாக நில்லப்பா பயப்ப டாதே
சூடெல்லாம் ஆறியபின் கரண்ட கத்தைத்
தணியாகக் குலுக்கிப்பார் கடக டக்கும்
சச்சிதா னந்தமென்ற ரூப மாகும்
பணிவாய்நீ கரண்டகத்தை யுடைத்தெ டுத்துப்
பராபரையைப் பூசைசெய்து மணியை வாங்கே (67)

வாங்கியதோர் மணியினுட மகிமை தன்னை
வல்லோர்கள் அறிவார்கள் மற்ருேர் காணுர்
ஏங்கியே திரியாதே மணியைத் தொட்டு
எட்டெட்டும் ஆடலாம் ஈச னுவாய்

ஓங்கியே வெண்ணுகம் உருகும் போது
†ஊட்டிப்பார் நீர்வாங்கி மணிதான் துள்ளும்
தாங்கியே எடுத்துநீ பாலிற் போடத்
தகைதீரப் பாலெல்லாம் குடிக்குந் தானே. (68)

தானென்ற விம்மணியை வாயி லிட்டுத்
†தணலிலே சுடாமல் நடக்க லாகும்
பானென்ற வஸ்துண்ணும் இரத்தம் உண்ணும்
படைமுகத்தில் சென்றிடிலோ குண்டே ருது
தேனென்ற மொழியாரைப் புணரும் போது
சிதருது விந்துகட்டித் தம்பிக் கும்பார்
நானென்ற ஆண்மையுண்டாம் அம்பு சாய்க்கும்
நன்ருக மந்திரமும் சித்தி யாமே. (69)

பா. வே. † **தண்ணியிலே சுசாமல்**

64 முதல் 69 முடிய உரை.

விளங்காய் அளவிலே இரும்புக் கரண்டகம் ஒன்று உண்டாக்கி அதனுள் பத்துக் கழஞ்சு வாலைரசம் ஊற்றி அதனுடன் அரைப் பாதிக்கு மணிப்பாலை விட்டு எழுசீலை மண் செய்து உலர்த்தி ஒரு எருவில் புடம் போடுக ஆறியபின் பிரித்து முன்போல் மணிப்பால் விட்டுப் புடமிடுக புடந்தோறும் ஒவ்வொரு எருக் கூட்டிப் பத்துப் புடம் வரைப் போட்ட பின்பு ரசம் (சனிக்கும்) துளிக்கும். அந்தப் பருவத்தில் மணிப்பாலை நிரம்ப விட்டுக் கன புடமிடுக. ரசம் உள்ளே மணியாகும். மணியாகத் திரளும் போது மதயானைக் கன்று போல் வீறிட்டுக் கட்டும். பதற வேண்டாம். கரண்ட கத்தைக் குலுக்கிப்பார் கடகடக்கும். கரண்டகத்தை உடைத்து எடுத்து வெண்ணுகம் உருகும் போது மணியை அதன் மேலிட்டால் வெண்ணுகத்தின் நீரைக் குடித்து விட்டுத் துள்ளும். எடுத்துப் பாலிலிட்டால் தகை நீரப்பால் குடிக்கும். வாயிலிட்டு நெருப்பில் சுடாமல் நடக்கலாம். படைமுகத்தில் குண்டேருது. அம்பு பாயாது விந்துகட்டும்.

நரைதிரை நீங்கக் காயசித்தி பெறக் கெந்தகச் செந்தூரம்

சித்திக்க வின்னமொரு முறையைக் கேளு
தேவியது நாதமப்பா கெந்தி கெந்தி
ஒத்தித்த செந்தூர மாகச் சொல்வேன்
ஒருபலமே சுத்தித்த கெந்தி வாங்கிப்
பத்திக்க அயக்கிண்ணிக் குள்ளே வைத்துப்
பாகமாய் மயிலெண்ணெய் நிரம்பவிட்டு
உத்திக்க அடுப்பிலிட்டுத் தீபங் கீழே
உண்மையாய்க் கிண்ணிநடு வெரிப்ப தாமே. (70)

எரித்திடுநீ தீபமணை யாமல் நன்றாய்
எரித்திடவே உருகிவற்றிச் செந்தூ ரிக்கும்
பிரித்துநீ ஆறவிட்டுச் செந்தூ ரத்தைப்
பேணியே பரணிதனில் எடுத்த டைப்பாய்
தரித்திரம்போம் நவலோகம் பழுக்கும் பாரு
சத்தியமே குன்றிஎடை பாலிற் கொள்ள
விரித்தகதிர் ஒளிபோலக் காந்தி யுண்டாம்
வேண்டியே தினந்தோறும் சாதிப்பாயே. (71)

சாதிக்க மண்டலத்தில் தேக சித்தி
தப்பாது நோயெல்லாந் தட்டுண் டேபோம்
வாதிக்க வேண்டுமென்றால் செந்தூ ரத்தை
வாங்கியே யாடகம்பத் தினில் தாக்கு
பேதித்துச் செம்பாகும் பசுத்துப் போகும்
பிசகில்லை சகத்திரமாந் தொந்தம் ஏறும்
ஊதித்தான் பருத்தறிநீ நவலோ கங்கள்
ஒன்பதிலும் ஓடுமிந்தத் தங்கம் தானே. (72)

தங்கமென்ற பசுந்தங்கம் பலமெ டுத்துத்
தாக்கடா செயநாகம் பலம தொன்று
பொங்காத சூதமது பலந்தா னென்று
போடுகெந்திச் செந்தூரம் பலந்தா னென்று

மாங்கதே இந்நாலுங் கல்வத் திட்டு
    மாட்டியரை †யரசன்பூக் கொன்றைப் பூவும்
சிங்கார மாதளம்பூப் புரசம் பூவும்
    செப்பினேன் முருக்கம்பூச் சாறிதஞ்சே. (73)

பா. வே † சரம்பூக் தாசனப் பூ.

அஞ்சான சாற்றுலே யஞ்சு நாள்தான்
    அரைத்தெடுத்து உலர்த்தியே குப்பிக் கேற்றித்
துஞ்சாதே வாலுகைதாம் எந்தி ரத்தில்
    சோராதே மூன்றுநாள் தீபம் மூன்று
மிஞ்சாதே எரித்திடுநீ நாற்பத்துமுக் கோண
    வீடுநடுத் தேவிதனைப் பூசை பண்ணி
நெஞ்சாரத் தியானித்துக் குப்பி தன்னை
    நிதானமாய் ஆறவிட்டு உடைத்து வாங்கே. (74)

உடைத்துப்பார் செந்தூரம் மாதளம்பூ
    ஒப்பல்ல சிமிழிலடை உமையாள் மெய்க்கப்
படைத்தசதா சிவன்மெய்க்க நூல்கள் எல்லாம்
    பாடிவிட்ட நாதாக்கள் மனது மெய்க்கக்
கிடைத்தநந்தி சூதமுனி வேதா மெய்க்கக்
    கிருபைபெற்ற மன்னோர்கள் மனது மெய்க்கக்
கொடைகமழும் வீசமெடைச் செந்தூ ரந்தான்
    கொடுத்துப்பார் ஒன்பதிலும் கோடிபரி யாமே. (75)

பரிகோடி யாகுமிதிற் றீப தூப பரிசலே பனவேதை நான்குங் காணத்
தெரிசனமாய்ச் சூதமுனி சொற்போ காது சிந்தையுள்ளே
    அகண்ட வெளிசோதி கண்டால்
கரிசனமாய்ப் பெரியோர்க்குத் தொண்டு பண்ணிக்
    கள்ளமின்றிச் சொன்னபடி கேட்டுநில்லு
பிரிசமதாய் – வாக்குரைப்பார் கருவுஞ் சொல்வார்
    பிரட்டானல் சாபமிட்டுப் போடு வாரே (76)

போடுவார் சாபத்துக் காளா காமல் பொன்னடியே
தெண்டனிட்டு வாக்குங் கேட்டுத்
தேடுதள செந்தூரம் பாலிற் கொள்ளச்
சிவத்தியானம் மறவால் எடைவீ சந்தான்
நாடியொரு போதுண்ணத் தேக சித்தி நரைபோகும்
திரைபோகும் ஒருச்சாமத்தில்
ஓடுமே பழவினைகள் எல்லாம் தூளாய் உகமுடிந்து
போச்சுதடா உண்மை தானே (77)

உண்மையாந் தேகசித்தி யாக வென்றால் உப்போடு
புளிபுகைகள் ஒன்று மாகா
வண்மையாங் கருங்குருவைச் சோறு வின்பால் மற்றொன்றும்
ஆகாது சீனி யாகும்
தண்மையாய் மண்டலமே கொண்டா யானல்
சதாசிவன்போல் கற்பாந்த காலம் காண்பாய்
பண்மையாய் நோய்கொண்ட மாந்தர்க் கெல்லாம் பாலோடு
காரசாரவுப்பு மாமே. (78)

ஆகாது புகையிலையும் புளியும் ரெண்டும் அகற்றினல்
மண்டலங்கால் தேனிலேதான்
வாகான செந்தூரம் எடைவீ சந்தான் மத்தித்துக்
கொண்டிடநோய் மாண்டு போக்சு
ஏகானா லாயிரத்து நானூற்று நாற் பத்தெட்டு நோயும்பறந்
தெங்கே போச்சு
பாகான பண்டிதம்பார் நந்தி சொன்ன பரிச்செந்தூ
ரங்கருவாய்ப் பார்த்துச் செய்யே. (79)

சகலசரக்குங்கட்ட

செய்திட்ட வைத்தியன்மகன் வாதி யாவான்
சேருகிற சரக்கையெல்லாங் கட்டக் கேளு
வைத்திட்ட அடிமுடியின் வெடிநீர் தன்னை
மடக்கியே மூன்றுதிரம் வற்ற நீராம்

உய்த்திட்ட உமியோட்டில் தோய்த்து வாட்ட
உறவான சரக்கெல்லாம் கட்டிப் போகும்
கைத்திட்டம் சவ்வாது காரம் கூட்டிக்
கைமுறையாய் உருக்கிப்பார் புகைந்தி டாதே. (80)

புகையாத சரக்கெடுத்து நவலோகத்தில்
பூட்டடா உருகுமுகந் தெளிவு பார்த்துத்
தோகைசெய்து அஞ்சாறு மாற்றுக் காணும்
சொன்னமுறை பொய்யாது சுரோணிதத்தா லாட
வகையீதென் றறிந்துசெய வல்லீ ராகில்
மாற்றதிக மாகுமிது சத்திய வர்க்கு
திகையாதே † நாதவிந்தை மறந்தி டாதே
தீர்க்கமாய்ப் பரங்கிவைப்பு நிகழ்த்து வேனே. (81)

பா. வே. † நாதத்தை மறந்திடாமே.

நோயெல்லாம் நீங்கவும், தங்கச் செம்பு செய்யவும் நவலோகம் பழுக்கவும் உடலில் கதிரொளிபோல் ஒளியுண்டாகவும் கெந்தகச் செந்தூரம்

70 முதல் 72 வரை

தூயதாக்கிய கெந்தி ஒரு பலம எடுத்து, இரும்புக் கிண்ணியின் உள்ளே இட்டு, மயிலெண்ணெய் நிரம்ப விட்டுப், பொருத்தமான அடுப்பின் மேல் வைத்து, அதன் கீழே விளக்கு வைத்து, விளக்கின் ஒளி கிண்ணியின் நடுவில் படும் வண்ணம் அமைத்து, எரித்தல் வேண்டும். விளக்கு அணையாமல் எரிக்கக் கெந்தி உருகி வற்றிச் செந்தூரமாகும் அதனை நன்றாய் ஆறவிட்டெடுத்துப் பேணிக்குப்பியில் வைத்துக் கொள்க. ஒன்பது வகை உலோகத்தையும் சுத்தி செய்து உருக்குமுகத்தில் கொடுக்கப் பழுத்துப் பசும் பொன்னாகும். குன்றி எடை பாலில் கொள்ள விரிக்கின்ற கதிரொளிபோல் உடலில் ஒளியுண்டாகும். நாள்தோறும் உண்க. 40 நாளில் உடலில் உறுதி உண்டாகும். எல்லா நோயும் நீங்கும்.

இச் செந்தூரத்தைத் தங்கம் உருகும்போது பத்துக்கு ஒன்று கொடுக்க அது செம்பாக மாறிவிடும். அதற்குத் தங்கச் செம்பு என்பது பெயர். இச் செம்பைத் தூயதாக்கிய ஒன்பான் உலோகங்களிலும் ஆயிரத்தில் ஒன்று தொந்தித்து ஏற்றப் பசும் பொன்னாகும். ஓர் உலோகத்தில் ஆயிரத்தில் ஒன்று ஊட்டி அதனை மற்றோர் உலோகத்துடன் சேர்த்து அதிலும் ஆயிரத்திலொன்றூட்டி இங்ஙனம் கலந்து கலந்து ஏற்றுவதற்குத் தொந்தித்து ஏற்றுதல் என்பது பெயர்.

73 முதல் 79 வரை

நரைதிரை நீங்கவும் ஒன்பான் உலோகத்தையும் செம்பொன்னாக்கவும் தங்கச் செந்தூரம், *4448* நோயும் தீர. முன்சொன்ன கெந்திச் செந்தூரம் *1* பலம், தங்கம் *1* பலம், கட்டியநாகம் *1* பலம், கட்டியரசம் *1* பலம் ஆகிய நான்கு பலமும் கல்வத்தில் போட்டு சரக்கொன்றைப் பூ. கொன்றைப் பூ. மாதளம் பூ, புரசம் பூ, முருக்கம் பூ ஆகிய ஐவகைச் சாற்றினாலே தனித் தனியே ஐந்து நாள் அரைத்து எடுத்து உலர்த்திக் காசிக்குப்பியிலிட்டு மணற் சட்டியினுள் வைத்து விளக்கழலாக மூன்று நாள் எரித்து எடுக்கச் செந்தூரம் மாதளம் பூ நிறமும் ஒப்பன்று. சிமிழிலடைத்துவை. உமையாள் மெய்க்கப், படைத்த சதாசிவன் மெய்க்க நூல்கள் எல்லாம் பாடிவிட்ட நாதாக்கள் மனது மெய்க்கக், கிடைத்த நந்தி சூதமுனி வேதா மெய்க்க, மன்னவர்கள் மனமும் மெய்க்க வீச மெடை எடுத்து ஒன்பான் உலோகங்களிலும் கொடுத்துப்பார். கோடிக் கணக்கான தங்கம் உண்டாகும். இச் செந்தூரத்தை — விளக்கின் ஒளியினாலும், புகையினாலும், தடவுதலினாலும், பூசிவைப்பதினாலும் ஊட்டிப்பார்க்க உலோகம் பொன்னாம். பொன்னைக் கண்டாலும் அடக்கமாகத் தொண்டு செய் தவம் செய் உள்ளொளி காண். கள்ளமின்றி அறிவர் சொற்கேட்டுநில், இது தளசெந்தூரம். வீசம் எடை (*16*ல் ஒரு குன்றி) பாவிற் கொள்ள உடலுறுதி. நரை போகும் திரை போகும். உகம் முடிந்து போன பின்பும் உகங்கடந்து வாழலாகும். உண்மை. உப்பு, புளி, புகை ஒன்றும் ஆகாது. கருங்குறுவையரிசிச் சோறும் ஆவின் பாலும் ஆகும். வேறொன்றும் ஆகாது, சீனி யாகும். *40* நாள் உண்டால்

கற்பாந்த காலம் வாழலாம். நோய் நீக்க வென்றால் பால், காரம், சாரம், உப்பு ஆகும். புகையிலை புளி ஆகா. தேனில் கொள் 4448 நோய் நீங்கும்.

80, 81 – ஆம் பாடல்களில்
எல்லா வகைச் சரக்கும் கட்ட

வெடியுப் புத்திராவகம் ஒரு முறை இறக்கி மீண்டும் ஒரு முறை முதலிற் சேர்த்த பொருள்களைச் சேர்த்து இரண்டாவதும் இறக்கி மீண்டும் ஒரு முறை முன் சேர்த்தவற்றைச் சேர்த்து மூன்றாவதும் இறக்கிப் பார்க்கக் கடுங்காரத் திராவகமாகும்.

கட்ட வேண்டிய சரக்கினைக் குறட்டினால் பிடித்து மேற்படி திராவகத்தில் தோய்த்து உமியோட்டில் எரியும் நெருப்புக்கு நேரே காட்டி வாட்டக் கட்டும். சவ்வாதும் காரமும் கூட்டி உருக்கினால் புகையாது. ஒன்பது வகை உலோகமும் தனித் தனி உருகும் போது கொடுத்துப் பார்க்க ஐந்து அல்லது ஆறு மாற்றுக் காணும். பொய்யாது. அந்தக் கட்டு வகைகளில் ஒவ்வொன்றையும் தேன் முதலிய துணை மருந்துடன் உரைத்துக் கொடுக்க மிகப் பல அரிய நோய் நீங்கும்.

பரங்கிவைப்பு, செம்பொன்னை நீற்றிக் குருவாகச் செய்ய

நிகழ்த்தலாங் கல்லுப்புப் படியிற்பாதி நினைவாக
வாங்கியொரு பாண்டத் திட்டு
மகத்துவமாம் இரதமொரு விராகன் பத்து வளமாகக்
குகையிலிட்டு நடுவேவைத்து
பகத்தவள வல்லிதனை நீற்றி மற்றோர் பாண்டத்தில்
தடவியதின் மேலே மூடித்
தகப்படவே அடுப்பேற்றி யெரிநேரப்பா சாமம்மூன்றினில்
தவள பற்பமாமே. (82)

ஆகியதோர் பற்பமது விராகன் நாற்பான் அடைவான
வெடியுப்பு விராகன்பத்து
பாகமுறும் படிக்காரம் விராகன் அஞ்சு பரிவான
நவச்சாரம் விராகன்ரெண்டு
மேகநிறம் போற்றுரிசு விராகன் ரெண்டு வெள்ளையொரு
விராகனிவை யெல்லாங்கூட்டி
யோகமுடன் கல்வத்தி லரைத்துப் பீங்கான் ஊட்டியோர்
பகல்முழுதும் உலரவையே. (83)

உலரவைத்த மருந்ததனை யினிதின் வாங்கி ஓரேழ்மண்
ணுடையிட்ட குப்பிதன்னில்
நிலவியிடப் படுபாதி யடைத்துக் கொண்டு நீடியதோர்
வள்ளவாய்ச் சட்டிதன்னில்
நலமுடைய வாலுகா எந்திரங்கள் நால்விரல்மண்
ணிட்டதன்மேல் குப்பிநாட்டி
இலகுகழுத் தளவும்பொடி மணல்மேல் கொட்டி
எடுத்ததனை யடுப்பேற்றி யெரிப்பதாமே. (84)

எரியிடுந் தீவிபரம் சொல்கி றேன்கேள் இலங்கியதீ
பாக்கினியோர் எட்டுச்சாமம்
உரியகம லாக்கினிநா விரண்டு சாமம் உற்றகா
டாக்கினியோர் எட்டுச்சாமம்
பிரிவுறவே மூன்றுநாள் எரிநே ரப்பா பிசகாமல்
தீயெரிக்கப் புகைமே லோடிக்
கருவாகிக் கழுத்துமுதல் பாதி மட்டும் கனதேங்காய்
போலவுந்தான் கட்டுந்தானே. (85)

கட்டியிடும் நேரம்பார்த் திறக்கி வைத்துக் கலங்காமல்
குப்பிதனை யெடுத்துக்கொண்டு
திட்டமுடன் சீதளமாய் ஆறவிட்டுத் திறமாக
வுடைத்தெடுத்த வீரந்தன்னை
மட்டறவே தராசிலிட்டு விராகன் நாற்பான் வளமாக
நிறுத்துமோர் கல்வத்திட்டு
இட்டமுட னுங்கதனிற் சேர்க்கும் பஞ்ச பாசாண
வகைவிபரம் இயம்புவேனே. (86)

இயம்பியதோர் தொட்டிப் பாசாணம் விராகனே ரைந்து
துரிசுசிலே யோரைந்து வெள்ளேயோ ரைந்து
நயம்பெறவே கெவுரியைந்து தார மைந்து
நன்ருக வேயைந்தும் வீரத் தோடு
பயந்தவிர அரைத்ததையோர் பீங்கானி லூட்டிப்
பங்கய நாயகன் கிரணம் படர்ந்து பாய்ந்து
தயக்கமுறும் நாள்முழுதும் உலர வைரத்துத்
தவருமல் முன்போலே குப்பிக் கேத்தே. (87)

ஏத்தியெரி வாலுகா யந்தி ரத்தில் எரியிடுந்தீ
விபரம் முன்போல் எரிப்பதாகும்
சாத்தியே சாமமிரு பத்து நான்கு தவருமல்
எரித்தெடுக்கப் பரங்கி யாகும்
ஏத்தமிகும் பாசாணம் பதினெட் டுக்கும்
ஏத்தமிதாம் ஆடகத்தை எளிதிற்கொல்லும்
மாத்தறிய வாகடம்போல் குருவினலே
மகாலோக பற்பமந்த வண்ணமாமே (88)

தங்கக்குரு

வண்ணமாம் ஆடகத்தைக் குருவாய்ச் செய்ய
வாங்கியே தங்கமொரு பலத்த கட்டில்
சொன்னதோர் சவ்வீரம் காற்ப லந்தான்
துஞ்சவே வெண்கருவில் அர்க்கன்பால் விட்டு
மன்னவே கல்வத்தி லரைத்தெ டுத்து
மத்தித்துத் தகடெல்லாம் மறையப் பூசி
கன்னவே ரவிகாட்டி யஞ்சு சுண்ணம்
கருவாலே யரைத்தெடுத்துப் பூசை பண்ணே. (89)

பண்ணியே வில்லையதை யிணக்கம் செய்து
பகலவன்கண் பார்க்கவிட் டெடுத்துவைத்துக்
கிண்ணிவாய் மேல்மூடிச் சந்து செய்து
கிட்டியதோர் உவர்ப்பூவும் கற்சுண் ணும்பும்
உண்ணவே சில்லிட்டு நன்ருய் மூடி
ஓரேழு சீலைசெய்து உணர்த்திமகிழ்ந் தெடுத்துச்
சண்ணியே முழுக்குழியில் புடத்தை போடு
சத்தியமே நந்தியுரை தங்கந்தான் குருவே. (90)

குருவாகும் பதிகருகித் தகடு நின்ருல்
கூசாதே பின்னெருகால் புடத்தைப் போடு
தருவாகத் திரிபுடமே போட்டா யானல்
சாம்பலாய் வெண்மைநிறக் குருவே யாச்சு
உருவாகும் குருவெடுத்துப் பரணி தன்னில்
ஊட்டியே யடைத்துவைத்து வாம பூசை
அருவாக உருவாகும் திருவு மாகும்
ஆதிகுரு பதத்தையுள்ளே அர்ச்சிப் பாயே. (91)

அர்ச்சிப்பாய் பால்பழங்கள் பலகாரங்கள்
அட்டியில்லா அவல்பொரிகள் பரமான்னங்கள்
நிர்ச்சித்த கெந்தபுட்பம் தீப தூபம்
நேரவைத்த வத்துவுட கடத்தை வாங்கிக்
கொர்ச்சித்துக் கேசரத்தி லோடித் தாண்டிக்
கிருபைபெற்ற நாதாக்கள் சாபம் தீர்த்து
நற்சித்த னுயிருந்து சகத்திர கஞ்ச
நடுநின்ற குருபதத்தில் நாட்டமுணே. (92)

ஊணியே பராபரைதாள் சென்னி சூட்டி
உத்தமியே சத்தமியே உமையே யென்னே
ஆணியாய்ச் சக்கரமெல் லாமு ருண்ட
அண்டவெளி குண்டலியின் தீயாய் என்னே

காணியாய் எவ்வுயிர்க்கும் பிரமப் புள்ளாய்க்
    காரணியே கண்ணொளியே கனியே என்னே
பாணியாய் நாதவிந்து மயமாய் நின்ற
    பார்பதியே சரசுபதியே அம்மே என்னே. (93)

அம்மையே நால்வேதம் பலகை யாக
    ஆறுசாத்தி ரங்கயிரு யமைத்து மேருக்
கொம்மைநடுக் கதிர்மதியைக் காலாய் நாட்டிக்
    கொண்டுசிவ கரங்களெல்லாங் குறுக்கே போட்டு
செம்மையொளி மண்டலமுன் றடரு மூலச்
    செழுஞ்சுடரே சுழிமுனையாய்ச் சேர்த்துத் தூக்கிப்
பொம்மையாம் இராசிமேற் கட்டி கட்டிப்
    பூத்தொடருந் தாரகையாய்ப் பூண்டா ளென்னே. (94)

பூணவே யலங்கரித்த பொன்னூஞ்ச லவர்க்குப்
    போதமெல்லா மொழியாக வேதி ரட்டிப்
பாணவே பதினெண்பேர் பாடும் நூலின்
    பயனெல்லாம் பஞ்சுமெத்தை யாகச் சேர்த்துத்
தோணவே யந்திரஇந்து வண்ணஞ் சாரந்
    துகிலாக வேவிரிதது்த் தூவு புட்பம்
ஊணவே நவலோகங் கண்ணொளியை யெல்லாம்
    ஒக்கவே நிறுத்தியதி லிருந்திட் டாளே. (95)

இருந்திட்டா ளவளோடு சிவனு மாகி
    ஏகபரமாகி எங்கு மாகி
பொருந்தட்ட போக்கியமும் சித்தோ டெட்டும்
    புத்திரற்குப் போதிக்கப் பூண்வல் லாயி
திருந்திட் டேகாசமிட்டு விழித்துப் பார்த்து
    தெட்சணமும் உத்தரமும் திசைபா ரெட்டும்
அருந்திட்ட ஆகாச சராச சங்கள்
    அத்தனையுங் குலுங்கவசைந் தாடீ ரென்னே. (96)

ஆடீர் ஆடீர் துவாத சாந்த மெல்லாம்
அகண்ட விராட் டுங்குலுங்க வசைந்தசைந்து
சூடீர்பே ரொளியுமிழு மருண காந்திக்
கொடிசுடரும் இரத்தினமணிக் கிரீடம் சாத்தி
சேடிமா ராபரணம் சாத்தீர் கோடி
சித்தர்நவ கோடிநவ நாதி கோடி
கூடீர் கூடிநின்று ரிசிகள் தேவர்
கொண்டாட என்தாயா ராடீ ரூசல். (97)

தாயே யாருதார மோராறுந்தான்
தாண்டிநின்ற சிவசோதி யென்று கூவு
ஓயாத மதியமுத மள்ளி யள்ளி
ஊட்டுகிற மோகினியே யென்று கூவு
மாயோனு மிந்திரனு மயனும் போற்றும்
மலர்ப்பீடத் தியாகமே யென்று கூவு
சேயபேயோ டாடியுடன் ஆடி வென்ற
சிற்பரையே பொற்பொதுவி லாடீர் ஊசல். (98)

ஊஞ்சலிலே கொலுவிருக்கு மென்னம் மாயி
உம்மாயி அம்மாயி ஓங்கா ராயி
சாஞ்சசிரி காராயி சிரிங்கா ராயி
சங்காயி ஐயும்கிலியும் சவ்வு மாகித்
தோஞ்சபிர ணவமுதலாய் வங்சிங் குள்ளாய்த்
துதிப்போருக் குள்ளொளியாய்த் துலங்கு மாயி
வாஞ்சையொடு செவிக்கவரும் ஆனந் தாயி
வருவாள்பின் கேட்டதெல்லாம் வழங்கு வாளே. (99)

வழங்குவாள் பொன்னூஞ்சல் கொலுச்சே வைக்கே
மணிக்கயிற்றைப் பூட்டிநீ யறிவா லாட்டி
உளங்களிக்க வகிலசரா சரங்க ளெல்லாம்
ஒக்கஅசைந் தாடீரென் றுள்ளே யாட்டு

பழங்கிளவி இளங்குமரி வாலைக் கன்னி
பச்சைமவுனி பரமா னந்தி என்னே
முழங்கு மானுதி தாண்டவாயி
மூவரையும் படைத்தருள் முக்கண்ணி யென்னே. (100)

என்னவே நினைத்ததெல்லாம் ஈவாள் பேச்சி
இகபரம் இரண்டுமமைத் தளிக்குந் தேவி
தன்னையே யுன்னுள்ளே கீழ்முக் கோணம்
தந்த வட்டவிந்து இதழ் நடுவி லேதான்
உன்னியே நமகுருவே நமச்சி வாய
என்றோது பிழையாமல் மவுனந் தாக்கு
மன்னியே பரமகுரு பாத்திர மேந்தி
மந்திரம்ஓம் அரிகூம்சிரிம் சங்கென் றூட்டே. (101)

ஊட்டுவாய் அவள்திருச்செம் பவழ வாய்க்கே
உண்டருள முன்வைத்து நீவே ருகிப்
பூட்டிமனம் பொறிபற்றிப் பாய்ந்தி டாமல்
புண்ணியசிவ லட்சுமியைப் பூசி பூசி
நாட்டமாய்க் குருபதத்தில் அறிவுபரை யிடமாய்
நன்றாகப் போகர்முறைப் படியே பூசி
தேட்டமாய்க் கடங்கொடுக்கும் உமையாள் வைத்த
சேஷமுண்ணப் பாத்திரந்தான் கொடுத்து வாங்கே. (102)

வாங்குவாய் ஆனந்தி மகமாயி கூடும்
மயேசுரர்க்குப் பாத்திரங்கள் வழங்கிப் பின்பு
பாங்குதூய அன்னபலா திகள் அருந்தப்
பார்பதிபோ சனிமாயி பயந்து செய்து
தாங்கியே பற்றுதலாய் நிறுத்தி வெவ்வேறு
தவசிருக்குஞ் சாதிக்க மந்திரம் பேசி
ஓங்கியே சமாதி சிவ யோகம்
உரைத்திருந்து வாமகுரு பூசை பண்ணே. (103)

பூசையிந்த விதிப்படியே செய்தோர்க் கையா
    பொய்யாது தொட்டசரக் கெல்லாம் நீறும்
தேசம்மெய்க்க வைத்தியமெல்லாம் செயமே யாகும்
    தேகசித்தி யோகசித்தி வாத சித்தி
ஆசைதரும் ஞானசித்தி யொல்லாம் ஆகும்
    ஆனந்த வயிரவனை மறந்தி டாதே
நேசமிகும் பொருளாகும் செந்தூ ரங்கள்
    நிசமாகும் வாமம்மற வாது செய்யே. (*104*)

தங்கக் குருமுறையில் தாமிர வெள்ளை

மறவாமல் பரிக்குருவில் ஒருகழஞ்சி எடுத்து
    மாசற்ற நவலோகம் உருக்கி யிட்டால்
உறவாகிப் பேதித்துத் திசைமாற் றாகும்
    உற்றுப்பார் தாம்பிரமிந்த முறையே செய்தால்
நிறமான வெண்மைநிறம் தாம்பிர வெள்ளை
    நீறினல் உம்மைவினை நீறிப் போச்சு
துறவான பரிநீற்றால் சயநோய் போச்சு
    துட்டரோ கங்களெல்லாம் தூளாய்ப் போமே. (*105*)

தூளாகப் பறந்தோடும் காய சித்தி
    சொர்ணமுண்ண மண்டலத்தில் காந்தி வேரும்
மாளாமல் மன்மதன்போல் கற்பகால மெல்லாம்
    மதியறிந்து நவசித்த னாவாய் ஆவாய்
ஆளாவாய் நாதாக்கள் ஆடிய தாக்கும்
    அடியானு கியேவணங்க அருளுண் டாவாய்
கேளாதி வேதமுனி கேட்க நந்தி
    கிருபையினல் சூதமுனி இன்னம் செல்வேன் (*106*)

நரைதிரை நீங்கக் குப்பிவைப்புச் செந்தூரம்
107 முதல் 109 முடிய அட்டகுன்மம், அட்டகாசம், மாருத நீரிழிவு, குறைநோய், வெள்ளை, குட்டம் நீங்க

சொல்லுவேன் தொட்டிப்பா சாணம் வீரம்
    சொக்கலிங்கம் ‡ திருநீல கண்ட வாலை
எல்லவே நீலகண்டன் கெந்தி ரெண்டு
    எடையொவ்வொன் றேகாலாய் விளங்கத் தூக்கி
† நல்லகுழிக் கல்லிட்டு நாத விந்தால்
    நாற்சாமம் அரைத்துரவி தனிலு லர்த்தி
வல்லகுப்பி தனிலடைத்துக் கடிகை தோண
    வாலுகையில் எரித்திடச்செந் தூரந் தானே. (107)

தானென்ற செந்தூரம் கருவங் கத்தில்
    தாக்கப்பா நூற்றுக்கொன் றுருகுமுகந் தெளிவில்
வேனென்று நொறுங்குமது ஓட்டி விட்டு
    வேண்டியே கலிப்படங்க வூதிப் போடு
கோனென்ற மாத்தென்ன தசமாற் றுரும்
    குன்றியெடை மண்டலந்தான் தேனிற் கொள்ளே
நானென்ற நரைபோகும் திரையும் போகும்
    நாதனென்று கற்பகாலம் இருத்தி டும்மே. (108)

இருத்துமல்லால் மானிடருக் கனுப்பா னத்தில்
    எள்ளளவு செந்தூரம் பத்தியமாய்க் கொடுக்க
பொருத்துகால் மண்டலத்தில் தீரும் நோய்கள்
    பொல்லாத குறைநோவு வெள்ளைக் குட்டம்

---

‡ **சிலைநான் கிடையோரொன்று.**

† **நல்லன்னபேதி யன்பதுக்கொன்ருக.**

வருத்தமுறும் அட்டகுன்மம் அட்ட காசம்
மாருத நீரிழிவு கர்ம நோய்கள்
ஒருத்தரிட முந்துஞ்சப் போகாதே யென்று
ஓடுமே காதவழிக் கப்பா லோதும். (109)

ஓதுமிந் நூல்நூற்றுப் பத்தை யுந்தான்
சற்புத்தி ரர்க்குநீ யோது சொன்னேன்
வாதுசெய்யுந் துன்மார்க்கர்க் கிதுகாட் டாதே
வைத்தியமுறைக் கருக்குருவும் வகைபே சாதே
நீதிகுரு நாதனிணை யடிநீங் காதே
நீளவுன்னைக் காத்ததுபோல் குருவைக் காரு
பாதுசெய்து சாற்றிடுவா ரிந்த நூலைப்
பாருகெதி மோட்சமுண்டாம் நூற்றுப்பத்தே. (110)

சூதமுனி சாமியாரருளிச் செய்த
சூத்திரம் 110 முற்றும்.
உரை தொடர்கிறது.

82 முதல் 88 முடிய

பரங்கி பாடாணவைப்பு.

இந்தப் பாடாணத்தால் தங்கம் நீறிக் குருவாகும்.
அந்தக் குருவினொடு சரக்குச் சேர்த்துக்
குப்பிவைப்புச் செந்தூரம் செய்துண்ண
நரைதிரைமாறும்.

அரைப்படி கல்லுப்பை ஒரு பாண்டத்தில் இட்டு நடுவில் பள்ளமாக இடம் அமைத்துப் பத்து விராகன் ரசத்தை ஒரு குகையிலிட்டு அந்தப் பள்ளத்தில் வைக்க வேண்டும். பின்னர் வெள்ளை அல்லிக் கொடியைச் சுட்டு நீற்றி ஒரு மேற்பானையில் பூசி முன் இரதம் வைத்த பானைமேற் கவிழ்த்து மூடி 3 சாமம் எரிக்க வெள்ளையான ரசபற்பம் கிடைக்கும்.

அந்த வண்ணம் செய்த பற்பம் விராகன் 40
வெடியுப்பு விராகன் 10
படிகாரம் விராகன் 5
நவாச்சாரம் விராகன் 2
துரிசு விராகன் 2
வெள்ளைப் பாடாணம் விராகன் 1

இவற்றைக் கல்வத்திட்டு அரைத்துப்பீங்கானில் சுரண்டிப் போட்டு வெயிலில் வைத்தல் வேண்டும். பின்னர் ஏழு சீலை மண் செய்த காசிக் குப்பிக்குள் அரைப் பாக அளவுக்கு வெயிலில் உலர்ந்த மருந்தையிட்டு ஒரு வள்ளவாய்ச் சட்டியில் மணலிட்டு நால்விரற் கடை மணல் மேல் குப்பியை நிற்க வைத்து அதன் கழுத்து வரைத் தெள்ளிய பொடி மணல் கொட்டி அடுப்பில் ஏற்றி எரிக்க விளக்கழல் 8 சாமம், தாமரையழல் 8 சாமம். காடாக்கினி என்ற பெருநெருப்பு 8 சாமம். ஆக மூன்றுநாள் எரிக்கப் புகைமேலே சென்று கருவாகிக் குப்பியின் கழுத்து வரைக் கனத்த தேங்காய் போல் கட்டும். (குப்பிவாயை முதலில் நன்ருக மூட வேண்டும்.) கட்டிய நேரம் பார்த்துக் குப்பியை இறக்கி ஆறவிட்டு உடைத்து எடுக்க வேண்டும். இது வீரம். இந்த வீரத்தில் 40 விராகன். தொட்டிப் பாடாணம் 5 விராகன். துரிசு, மனோசிலை, 5 விராகன். வெள்ளை 5 விராகன், கெவுரி 5 விராகன். தர்ரம் 5 விராகன். இந்த வகை ஐந்தையும் மேற்கூறிய வீரத்துடன் சேர்த்து அரைத்து வழித்து ஒரு பீங்கானில் இட்டு நாள் முழுதும் வெயிலில் காய வைத்துக் குப்பிக்கு ஏற்றி மணற் சட்டியில் நிறுத்தி வைத்து மேற் சட்டி மூடி முன்போல் எரித்தல் வேண்டும். 24 சாமம் எரித்து எடுக்கப் பரங்கிப் பாடாணமாகும். இது பாடாணம் 18லும் சிறந்த ஏற்றமிக்கது, தங்கத்தை எளிதாக நீற்றிக் குருவாக்கும்.

89 முதல் 91 முடிய தங்கக்குரு

ஒரு பலத் தங்கத்தைத் தகடாகத் தட்டி, முன் சொன்ன வீரத்தில் காற்பலம் எடுத்து வெண் கருவும் எருக்கலம் பாலும் கலந்துவிட்டு அரைத்துத் தகடு மறையப் பூசி உலர்த்தி ஐந்து

சுண்ணக் குகைக்குள் வைத்துச் சில்லிட்டு உவர்ப்பூவும் கற் சுண்ணும்பும் அரைத்துப் பூசி ஏழு சீலே செய்து உலர்த்தி முழப்புடமிடத் தங்கம் குருவாகும். உண்மை. இது நந்தியின் சொல். ஒருவேளே நீருமல் தகடாக இருந்தால் பின்னும் ஒன்றிரண்டு புடமிடச் சாம்பலாக நீறி வெண்ணிறக் குருவாகும் உருவாகும். திருவுமாகும்.

92 முதல் 104 முடிய
இறைவியின் பூசனே

இறைவியாக எங்கும் நிரம்பிய ஆற்றலேப் பூசனே செய். பால் பழம் பலகாரம் அவல் பொரி பரமான்னங்கள் நறும் பூ தீப தூபம் வைத்துச் சாபம் தீர்த்து உச்சியின் மேல் ஆயிரம் இதழ் ஒளியுள்ள தாமரைப் பூவின் நடுவே நின்ற குருவின் திருவடியில் நாட்டத்தை நிறுத்துவாயாக. இதுவே சாகாக் கலே 93 முதல் 104 முடிய இறைவியைப் போற்றும் பாடல்கள். படித்து உணர்க.

105 முதல் 106 முடிய

தங்கக் குருமுறையில் தாமிர வெள்ளே செய்யச்
சய நோயையும் தீய நோயையும் நீக்க.
பத்துமாற்றுத் தங்கம் செய்ய. காயசித்தி பெற.

ஒன்பான் உலோகங்களேயும் தூய தாக்கி உருக்கிப் பரிக்குருவில் ஒரு கழஞ்சு இட்டால் பத்து மாற்றுச் செம்பொன்னுகும். இவ்வாறே செம்புத் தகட்டையும் வெள்ளேயாக நீற்றினுல் சய நோயும் மற்றும் பல தீய நோயும் நீங்கிவிடும் தங்கக்குரு உண்ண 40 நாளில் உடல் வலுக்கும். ஒளியுண்டாகும். மன் மதன்போல் கற்ப காலமெல்லாம் வாழலாம்.

107 முதல் 109 முடிய
பத்துமாற்றுச் செம்பொன்

செய்யக் குப்பிவைப்புச் செந்தூரம். நரை திரை நீங்கும். அட்டகுன்மம், அட்டகாசம், மாருத நீரிழிவு, குறை நோய், வெள்ளே, குட்டம் ஆகியவை நீங்கும்.

தொட்டிப் பாடாணம், வீரம். லிங்கம், வாலைரசம், இவற்றுடன் துருசுகெந்தி ஆகிய இரண்டும் சேர்த்து ஒவ்வொன்றும் காற் காற் பலமாக எடுத்து முன்சொன்ன வெள்ளைக் கருவும் எருக்கம் பாலும் (முட்டையிலுள்ள வெள்ளை—விந்து. மஞ்சள்—நாதம்) விட்டு அரைத்து உலர்த்திக் குப்பிக்கு ஏற்றி முன் சொன்ன முறைப்படி எரித்து எடுக்கச் செந்தூரமாகும். தூயதாக்கிய கருவங்கத்தில் நூற்றுக்கு ஒன்று கொடுக்க நொறுங்கும். அதனை ஓட்டில் வைத்துக் கலிப்படங்க ஊதுக. 10 மாற்று. குன்றி எடை தேனிற் கொள்ள நரை திரை நீங்கும். எள்ளளவு செந்தூரம் பத்தியமாகக் கொடுக்க 10 நாளில் "பொல்லாத குறை நோவு வெள்ளை குட்டம் வருத்த முறும் அட்டகுன்மம் அட்டகாசம் மாருத நீரிழிவு கர்ம நோய்கள்" காதவழி ஓடும்.

110 - ல் நூற்பயன்

இந்நூல் 110 பாடல்களையும் நல்ல மகனுக்கு எடுத்துச் சொல். தீய நெறியினருக்குக் காட்டாதே. தன்னைக் காத்துக் குருவையும் காத்துக் கொள். நன்மையுண்டாம்.

சூதமுனி சாமியார் அருளிச் செய்த

சூத்திரத்திற்குப்

பேராசிரியர், **ந. சேதுரகுநாதன்** *எழுதிய உரை*

முற்றிற்று.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
பொருளடக்கம்			
2	27	164	64
3	3	நேயொல்லாம்	நோயெல்லாம்
முகவுரை 5	17	வாக்கிதுப்பாது	வாக்கிது தப்பாது
நூல் 1	22	பெற்றுச்அம்	பெற்றுஅம்
1	24	சமயம் 96	சயம் 96
1	29	வேமுனி	வேதமுனி
4	12	அருன்	அருள்
5	31	மெயர்	பெயர்
6	8	ரோம்	ரோகம்
7	20	பூசுஜைகள்	பூசஜைகள்
8	10	சூமாமே	குமாமே
8	25	கேவற்புட	சேவற்புட
8	31	அத்துடண்	அத்துடன்
9	28	சாறெடுத்நு	சாறெடுத்து
10	6	கெங்காசல்	கெங்காசல
19	9	தைத்துக்	வைத்து
26	9	பிடைத்து	பிசைந்து
28	27	நீரப்பால்	தீரப்பால்
29	25	பருத்தறி	பகுத்தறி
30	1	மாங்காதே	மங்காதே
31	20	போக்சு	போச்சு
32	10	வர்க்கு	வாக்கு
43	17	பரங்கி பாடாண	பரங்கிப் பாடாண